Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு


மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

சுதகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆவணி திங்கள் 28-ம் நாள் (13—9—1959) ஞாயிற்றுக்கிழமை ற.அவ்வல் பிறை 9 இதழ் 15



வார்சோவில் நடைபெற்ற 48-வது சர்வதேசப் பார்லிமெண்டரி மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. ஏ. கந்தையா பேசிக் கொண்டிருக்கிறார். "இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு இருந்திருப்பின் கடந்த வருடத்து இனக் கலவரம் ஏற்பட்டிருக்குமா? தமிழர்கள் தாங்கொணாத் தொல்லை அனுபவிக்க நேர்ந்திருக்குமா?" என்று முழங்குகிறார். செய்தி 9-ம் பக்கம் பார்க்க.

# எம். பி. களுக்கு 'போனஸ்'!

## பாராளுமன்றக் கூட்டங்களுக்கு தவறாமல் சென்றால் கிடைக்கும்

## வாக்கெடுப்புகளில் கலந்து கொண்டாலும் தரப்படும் என்று அரசாங்கத் தரப்பில் பேச்சு

## அசல் 'லஞ்ச' நடவடிக்கை இது என்று எதிர்க் கட்சிக்காரர் வர்ணனை

(சுதந்திரன் நிருபர்)

பாராளுமன்றக் கூட்டங்களுக்குத் தவறாமல் சமுகமளித்து, எல்லா வாக்கெடுப்பின் போதும் வாக்களிக்கும் அல்லது சமுகமாயிருக்கும் பிரதிநிதிகளுக்கு, ஒரு விசேஷ 'போனஸ்' வழங்கலாமா என்று அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பெரிய தலைகள் சில ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகிறது.

இந்த ஆலோசனை உருப்பெற்றால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாம் பெறும் மாதாந்த வேதனத்துக்குப் புறம்பாக, பாராளுமன்றக் கூட்டத்துக்கு சமுகமளித்த ஒவ்வொரு தினத்துக்கும், வாக்களித்த ஒவ்வொரு தடவைக்கும் இவ்வளவெனக் கணக்கிட்ட ஒரு விசேஷப் படியை பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் பாராளுமன்றக் கூட்டங்களுக்குக் "கள்ளம் போடுதல்" அடிக்கடி "கோரம்" இல்லாக் கோரம் ஏற்படுகிறது. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகிறது. இதனால் அரசாங்கத்துக்கு வீண் செலவும், விஷயங்களை முடிப்பதில் காலதாமதமும் ஏற்படுகின்றன.

### தடுக்க வழி

இவற்றைத் தடுப்பதற்கு மேற்கூறிய 'போனஸ்' முறை பலனளிக்கும் என்று அரசாங்கக் கட்சியிலுள்ள பிரமுகர்கள் சிலர் வாதிக்கின்றனர். அரசாங்கத்துக்கு ஏற்படும் அநாவசிய செலவை விட 'போனஸ்' தொகை குறைவாகவே இருக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகிறதாம். வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பிரதம மந்திரியின் மான்யத்தை விவாதிப்பதற்குக் கூடக் 'கோரம்' இல்லாமல் சபை ஒத்திப் போடப்பட்டது நேயர்கள் அறிந்ததே.

### லஞ்ச நடவடிக்கை!

அரசாங்கத்தின் இந்த ஆலோசனையை எதிர்க் கட்சியினர் வேறு விதமாக வியாக்கியானம் செய்கிறார்கள். மட்டு மட்டாக அருந்தாபத்தி மெஜாரிட்டியோடு இயங்கும் அரசாங்கக் கட்சி தன் பக்கமுள்ள அங்கத்தவர் அனைவரையும் 'கட்டி மேய்ப்பதில்' பெரும் கஷ்டம் அனுபவித்து வருகிறதென்றும், அரசாங்க 'விப்' வெளியிடும் கட்டளைப் புறக்கணித்து அவர்கள் பாராளு

(8-ம் பக்கம் பார்க்க)

# "புதினக் காட்சிசாலை ஒன்று இருந்திருக்குமானால் அதில் வைத்திருப்போம்"

## சிங்களத்தில் எழுதிய சுகாதார பகுதிக்கு ஏருவூர் வடக்கு கி. ச. தலைவர் பதில்

(சுதந்திரன் நிருபர்)

"எங்களைத் தேடி வந்து அவமானத்தை ஏற்படுத்தி வைத்த தங்களது சிங்களக் கடிதம் பதிவுத் தபாலில் தங்களுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. எங்களது காரியாலயத்தில் புதினக் காட்சிச்சாலை ஒன்று இருந்திருப்பின் தங்கள் கடிதத்தைத் திருப்பி அனுப்பி வைக்கும் சிரமம் எங்களுக்கு ஏற்பட்டிராது" என்று ஏருவூர் வடக்கு கிராமச் சங்கத் தலைவரும் தமிழரசுக் கட்சிப் பிரமுகருமான திரு பி. மாணிக்கவாசகம் சுகாதாரப் பகுதிக்கு எழுதியுள்ள ஒரு காரமான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரப் பகுதியினர், ஏருவூர் வடக்கு கிராமச் சங்கத் தலைவரான திரு மாணிக்கவாசகத்துக்கு அனுப்பியுள்ள ஒரு உத்தியோகபூர்வமான கடிதத்தைத் தனிச் சிங்கள மொழியில் எழுதியுள்ளார்கள். இக்கடிதத்தினால் ஆத்திரமடைந்தவரான திரு மாணிக்கவாசகம் அந்தச் சிங்களக் கடிதத்தை

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரர் சுபாஸைப் போல தீவிர இயக்கம் நடத்திஞல் என்ன?

## அரசியலைத் துறப்பது கோழைத்தனம்— தமிழரை நட்டாற்றில் கைவிடும் நயவஞ்சகம்

## தம்கொள்கையில் பற்றும் உறுதியும் கொண்ட ஒருவர் தோல்வியைக் கண்டு துவளுவதா?

வவனியாப் பட்டின வாக்காளர் தமது தனியரசுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்ற காரணத்தால் திரு. சுந்தரலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க முடிவு செய்துள்ளார். இந்த முடிவை மாற்ற வேண்டுமென மக்கள் கேட்டுக் கொண்டதெல்லாம் பயனளிக்கவில்லை. தான் சொன்ஞல் 'சொன்னதுதான்' என்று மிக உறைப்பாகக் கூறியிருக்கிருர்.

### தீர்ப்பு

ஒரு பாராளுமன்ற உறுப்பினர், தமது கொள்கைகளை மாற்றிக்கொண்டாலோ, தொகுதி மக்கள் தம்மை ஆதரிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டாலோ, பதவியை ராஜிஞமாச் செய்வது வரவேற்கத்தக்க முன்மாதிரியாகும். ஆனுல், தம் தொகுதி மக்கள் தமது கொள்கைகளை ஆதரிக்கிருர்களோ இல்லையோ என்பதை தேர்தல் நடத்திப் பார்த்து முடிவு செய்வதுதான் நியாயமான காரியம். வவனியாப் பட்டினத்தாரின் தீர்ப்பை, பாராளுமன்றத் தொகுதியின் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை மக்கள் பலதடவை எடுத்துக் காட்டியும் அவர் ஏற்க மறுப்பது வருந்தத் தக்கது.

### அரசியலைத் துறப்பது கோழைத்தனம்

மேலும், ஒரு அரசியல்வாதி, தம் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்ருல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதோடு அரசியல் வாழ்க்கையையும் துறக்க நினைப்பது, மிகத் தோல்வி மனப்பான்மை கொண்ட செயலாகும். உண்மை அரசியல் வாதி தம் கொள்கை சரியென உணர்ந்து அதில்தாம் பற்றுக்கொண்டிருந்தால் மக்களின் ஆதரவு கிட்டும் வரை பிரசாரத்திலீடுபட்டுழைக்க வேண்டும். தமது கொள்கையின் நன்மை தீமைகளைப் புரிந்து கொள்ள மக்களுக்குக் காலங் கொடுக்கவேண்டும்.

### தமிழரசார்

1952-ல் தமிழரசுவாதிகள், பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி கண்டும், தமது அரசியற் கொள்கைகளையோ, அரசியல் வாழ்வையோ கைவிட்டு விடாதது குறிப்பிடத்தக்கது. தமிழரசுக் கட்சியின் கொள்கைகளைப் பற்றியும் அவற்றை அடையக் கூடிய மார்க்கங்களைப் பற்றியும், அவற்றின் நன்மை தீமைகளையும், நாட்டின் மூலை முடுக்கெல்லாஞ் சென்று மக்களுக்குப் போதித்து வந்தார்கள். அதன் பயனை 1956 தேர்தல் காட்டிற்று.

க. முத்தையா



திரு. வி. சுந்தரலிங்கம்

தனித் தமிழ் ஈழம் என்ருல் இலங்கையின் எவ்வெப் பகுதிகளை அடக்கியிருக்கும், அது தமிழ் மக்களுக்கு எவ்வெவ் வகையில் நன்மை தரும், அதை அடையக் கூடிய மார்க்கங்களை வை என்பன போன்ற விஷயங்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களிடையே, போதிய, தெளிவான அறிவு தரப்படாத நிலையில் திரு. சுந்தரலிங்கம் அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியிருக்க நினைப்பது சரியான செய்கையாகாது. மக்கள், ஒருவரையோ, அவர் கொள்கைகளை யோ கண் மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது.

### பண்பாளர் ஒதுங்குவதா?

தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை இழந்து ஆளும் வர்க்கத்தின் அடிமைகளாக இருக்கிருர்கள். இந்த அடிமை வாழ்விளின்றும் விடுதலை கிட்டாதா என ஏங்கி நிற்கிருர்கள். இந்த அடிமை நிலைக்கு, முந்திய காலங்களில் உதவிய அரசியல் வாதிகளுள் திரு. சுந்தரலிங்கமும் ஒருவர். ஆனுல், பெருந்தன்மையும்,நேர்மையும்வாய்ந்த இவர், தாம் செய்த தவறை உணர்ந்து, அதற்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கேட்டார். பின்னர் பிராயச் சித்தஞ் செய்யும் வகையில், சிங்கள ஏகாதிபத்தியத்தை இறுதி மூச்சுவரை எதிர்ப்பதென்று உறுதி பூண்டார். இயன்றவரை எதிர்த்தும் வந்தார் வேறு சில அரசியல்வாதிகளைப்போலச் சுயநலப் பேய்க்காளாகாது தம்மைக் காத்தும் வந்தார் அத்தகைய சிறந்த பண்புகளை கொண்ட ஒருவர், சிங்கள ஏகாதிபத்தியத்தை, எதிர்க்கும் சக்திகளுக்கு (தமிழருக்கு) உதவி செய்தால், ஒதுங்கி இருப்பதிலும் பார்க்க, அதுவே ஒருதொண்டாக அமையாதா? கடற் கொந்தளிப்பில் தத்தளிக்கும் மக்களுக்குப் படகு போல உதவாவிடினும், ஒரு மிதப்புக் கட்டையாக வேனும் உதவ முடியாதா?

### நழுவுவது சரியல்ல

திரு. சுந்தரலிங்கத்தாரின் இன்றைய செய்கை மக்களை நட்டாற்றில் இறக்கி விட்டு, தாம் தப்பிக்கொண்ட ஒரு துரோகச் செய்கையாகத் தோன்றுகின்றது. அவர் தம்

(11-ம் பக்கம் பார்க்க)



தமிழ் முழக்க விழாவில் திரு. கு வன்னியசிங்கம் உரிமைக் கோஷங்களை பொதுமக்கள் பார்வைக்காகத் திரை நீக்கம் செய்து வைக்கிருர். ஆண்மைத் தமிழ் ஆசிரியர் திரு. இறை புகழ்வாழி பேசிக்கொண்டிருக்கிருர். சொற் கலைப் புலவர் வண. ஞானப்பிரகாச அடிகளாரின் திருவுருவப் படம் பூரண கும்பத்துக்கு முன்ஞல் காணப்படுகிறது.

# "உரிமைகள் கேட்டோம் இதுவரை கிடைக்கவில்லை-இனி கேளாமலே பெறப் பார்க்கவேண்டியதுதான்"

## தமிழ் முழக்க விழாவில் தலைவர் பேச்சு

### வண. ஞானப்பிரகாச அடிகளாருக்கும் புகழ் மாலை

"கள்ளத் தோணி'களாய், காடையர் கூட்டமாய் விஜயனும் அவனது தோழர்களும் இந்த நாட்டுக்கு வந்தார்கள் என்றுதான் சரித்திரமே கூறுகிறது. ஆனுல் அவன் வழிவந்த இன்றைய ஆட்சியாளரோ தம்முடையபூர்வாசிரமத்தை மறந்து விஜயன் வருகைக்கு பல காலத்துக்கு முன்னர் தொட்டு இங்கு வாழ்ந்துவரும் தமிழர்களை 'கள்ளத் தோணிகள்' என்று கேலி பேசுகின்றனர்.

"தமிழருக்கு மொழியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை வழங்க மறுக்கும் சிங்கள அரசாங்கத தலைவர் திரு பண்டார நாயகாவுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இதுவரை உரிமை கேட்டோம்; கிடைக்கவில்லை. இனி கேளாமலே பெற்றுக்கொள்ளும் வழியை நாம் பார்க்க வேண்டும்"—இவ்வாறு ஆண்மைத் தமிழ் ஆசிரியர் ஏ. க. ரூ. இறைபுகழ்வாழி கூறினர்.

சொற்கலைப் புலவர் வண. ஞானப்பிரகாச அடிகளாரின் 84-ம் ஆண்டு நிறைவு விழாவும் தமிழ் முழக்கத் திறப்பு விழாவும் அணிமையில் கோப்பாய் இறைஒம்பல் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த திருமதி கத்தறீன் சூசைப்பிள்ளை பந்தலில் நடைபெற்றது. ஆண்மைத் தமிழ் ஆசிரியர் ஏ. க. ரூ. இறைபுகழ்வாழி தலைமையில் நடந்த இவ் விழாவில் கோப்பாய்ப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம் கலந்துகொண்டு தமிழ் முழக்கத் திரை நீக்கம் செய்ததோடு சொற்பொழிவும் ஆற்றினர்.

திரு வன்னியசிங்கம் பேசியதாவது:-

### 25 லட்சம் தமிழரசு கோட்டைகள்

"இருபத்தைந்து லட்சம் தமிழரசுக் கோட்டைகள் இந்த நாட்டில் உண்டு என்று தலைவர் கூறினர். ஆம், இந்த நாட்டில் 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிருர்கள் என்பதையே அவர் குறிப்பிட்டார். இதை ஆட்சியாளர் உணர்வதாகக் காணேம். இதனுலதான் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கக் கூட அவர்கள் மறுக்கிருர்கள்.

### தமிழும் நாமும்

"இதற்கு வழி தமிழர்கள் தாம் அரசாங்கத்துடன் ஆற்றும் கருமங்களை யெல்லாம் தமிழில் செய்வதாகும். அப்போது அரசாங்கம் பணிந்துதான் ஆக வேண்டும். அரசாங்கத்தின மனத்தைத் திருப்பும் அதே வேளையில் நம்மிடையே இருக்கும் சிலருடைய மனத்தையும் திருப்பி அவர்களைத் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி செய்ய வேண்டியிருக்கிறது. நாம் எல்லோரும தமிழை மதித்தால் அரசாங்கத்தால் மட்டும் அதை அவமதித்துவிட முடியாது."

திரு வன்னியசிங்கம் மேலும் பேசுகையில் வண. ஞானப்பிரகாச அடிகளாரின் சேவை பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:-

### சமயப் பணியும் தமிழ்த் தொண்டும்

"தமிழ்த்தாய் பெற்றெடுத்த தலை சிறந்த தவப் புதல்வர்களுள் வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச அடிகளார் ஒருவராவர். அடிகளார் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அத்தனை சமயப் பணிகளுடன் இத்தனை தமிழ்த் தொண்டுகளையும் எங்ஙனம் செய்தாரென நாம் சிந்திக்கும்போது இவற்றிற்கெல்லாம் அடிகளாரிடம விளங்கிய விவேகத திறனும், கூர்ந்த புத்தியுமே

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதிஞல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



கலைதாசன், கல்லடிஉப்போடை.

கே: ஒருவனுடைய வாழ்க்கையில் இன்பமான நேரம் எது?

ப: உண்மையைச் சொல்லப்போனல் இதுதான்: உடம்பில் எந்தப்பாகத்திலாவது 'கடி' அல்லது 'சொறி' ஏற்பட்டால் அதை அளவோடு தடவி ஆற்றுகிறனே, அதுதான் இன்பமான நேரம்.

ஃ

ஏ. சி. என். டீன்.
வெள்ளவத்தை.

கே: கண்ணகி சாமர்த்தியசாலியாக இருந்திருந்தால் கோவலன் மாதவியிடம் போயிருப்பானு?

ப: எப்படி இல்லையென்று சொல்ல முடியும்? பாயசத்தை சுவைத்துச் சுவைத்து மூக்கு முட்டச் சாப்பிட்ட கையோடு பழத்தை வேறு நாடுகிருர்களே!

ஃ

ஆர். எஸ். பாலன், கொழும்பு.

கே: இன்றைய அரசாங்கம் வெறும் லொட லொட்டை என்கிறேன்...

ப: இல்லை. அதைவிட லொட லொட்டை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஊரும் பஸ் வண்டிகள்.

ஃ

எம். பி. றகுமான்,
திருகோணமலை.

கே: தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுள் பாராளுமன்ற அரசியல் நுணுக்கங்கள் தெளிவாக அறிந்த பிரமுகர் யார்? தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்கள் தாமே?

ப: இல்லை. எந்த விஷயத்திலும் இறுதி முடிவு செய்யும நீதிபதி ஸ்தானத்தில் விளங்குபவர் தமிழரசுத் தந்தை. நிதானமாக, ஆழமாக, பதஷ்டமின்றி எந்தக் காரியத்தையும் சிந்தித்து முடிவுக்கு வருபவர். ஆனல் பாராளுமன்ற விஷயங்களில் பண்டிதராக விளங்குபவர் திரு வன்னியசிங்கம். திரு வன்னியசிங்கத்துக்குத் தெரியாத விஷயம் ஏதாவது இருந்தால் அது தெரியவேண்டிய விஷயம் அல்ல என்பதுதான் பொருள்.

பெ. இராசநாதன்,
மட்டக்களப்பு.

கே: எதிர்மானசிங்கம்,வன்னியசிங்கம் ஆகிய இரு சிங்கங்களுக்கும் வித்தியாசமென்ன?

ப: ஒன்று நாய்ச் சிங்கம், மற்றது சடைச் சிங்கம். தஹநாயகா போன்ற ஒரு மந்திரியிடம் ஏதாவது காரியம் பெற வேண்டுமானல் ஒன்று "சேர், சேர்" என்று வாலைத் தடவிப் பிடிக்கும் தாத்தில் உள்ளது. மற்றது "மிஸ்டர் தஹா" என்று தொண்டைக் குழியைக் கௌவிப் பிடிக்கும் திறத்தில் உள்ளது.

ஃ

மு. பரஞ்சோதி,திருகோணமலை.

கே: தமிழரசுக் கட்சியார் டிஸம்பரில் நடைபெறும் தங்கள் வருடாந்த மாநாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்ட கண்காட்சியொன்றை நடத்தப் போகிருர்களாமே!

ப: இத்தனை வருட காலமும் கண்காட்சிகள் நடத்தியது போதாதா? இனியாகிலும் செயலாட்சியில் ஈடுபட வேண்டாமா? இப்படிக் கேட்கிருர் அதிருப்தியடைந்த கட்சிப் பிரமுகர் ஒருவர், உள்ளூர் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதைவிட தமிழரசார் கைத்தறி ஆடைகளை அணிவதும், தமிழில் கடிதப் போக்குவரத்துக்களை நடத்துவதும் நல்ல செயலாட்சியாகும்.

ஃ

தெ. பாஸ்கரன், பண்டாரவளை.

கே: புத்தகங்களிலே மிகவும்உயர்வானபுத்தகம் எது?

ப: ஏழைக்கு அரிசிக் கூப்பன் புத்தகம், பணக்காரனுக்கு வங்கிச் செக் புத்தகம்.

ஃ

க. தெய்வநாயகம், மீசாலை.

கே: பக்தர்கள் கூடும் நல்லூரான் திருப்பதியிலே நவநாகரீக நங்கையரும் கூடிக் குலுக்கிக்கொண்டு திரிகிருர்களே, இவர்களை என்னவென்று அழைக்கலாம்?

ப: பாஷாணிகள் என்று அழைக்கலாம். பாஷன் என்ற அடியிலிருந்து பிறந்தது இந்தப் பதம். அணிமணிகளையும் அலங்கார ஆடைகளையும் அணிந்து பாஷன் காட்டுவோர் பாஷாணிகளாவர்.

ஃ

க. பாலசிங்கம், மட்டக்களப்பு.

கே: மந்திரி வி. பி. டி. சில்வாவுக்கு ஆபத்தாமே...

ப: ஆம், ஆபத்துத்தான். ஆனலும் மனிதர் போய் விடக்கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை. ஏனென்ருல் அடுத்த பொதுத் தேர்தலில் பொலநறுவை மக்கள் கொடுக்கும் பரிசை அவர் வாங்கி வருந்த வேண்டுமல்லவா?

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ஃ

ம. த. சீனிவாசகம், மானிப்பாய்

கே: நண்பர் அமிர்தலிங்கம் எந்தக் காரியத்தையும் முந்திக்கொண்டு செய்கிருரே, எதனல்?

ப: அவர் கைக்கடிகாரம் தினமும் அரை மணித்தியாலம் முந்திக்கொண்டு ஒடுவதால்.

ஃ

பெ. வேலன், திருகோணமலை.

கே: கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகரைத் தோற்கடித்தேன், தோற்கடித்தேன் என்று அரை மந்திரி எதிர்மானசிங்க(ள)ம் துள்ளுகிருரே, அவர் பெற்ற மெஜாரிட்டி என்ன?

ப: அந்த வெட்கக்கேட்டை வெளியிடத்தான் வேண்டுமா? இதோ: எதிர்மான சிங்க(ள)ம் பெற்ற வாக்குகளில் 54 வாக்குகள் ராஜமாணிக்கத்துக்குக் கிடைத்திருந்தால் துள்ளுபவர் துவண்டிருப்பார்.

ஃ

திருமதி கு. பாலசரஸ்வதி,
கண்டி.

கே: ஒருவருக்கு எத்தனை குழந்தைகள் வேண்டும்?

ப: நடுத்தர வகுப்பாருக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு போதும். நல்ல வருவாய் உள்ளவருக்கு இரண்டு ஆணும் இரண்டு பெண்ணுமாக நான்கு பாதகமில்லை. இதற்கு மேல் பெறுவது வீட்டில் வறுமையையும் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதிகரிக்கச் செய்வதாகும்.

ஃ

"குடாநாட்டான்", புளியங்குளம்.

கே: ஞாபகத்துக்கும் மனனத்துக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: ஒரு பாட்டு முழுவதும் மனப்பாடமாக இருப்பது மனனம். அந்தப் பாட்டின் முதலடி நினைத்தவுடனே மனதில் உதிப்பது ஞாபகம்

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: சமசமாஜக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இரண்டு கட்சிகளிலும் உறுதிவாய்ந்த தலைவர்கள் இருக்கிருர்கள். இது ஒற்றுமை. முன்னதற்கு தலைமைக் காரியாலயம் உண்டு. பின்னதற்குக் கிளைக் காரியாலயங்கள் தான் உண்டு. இது வேற்றுமை.

ஃ

த. இராசரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே, உம்மை எதிர்த்துக் கூட்டம் போடுகிருர்களாமே, இங்கு சில சில்லறைகள்?

ப. குயுக்தியார் என்ன தேர்தலுக்கா நிற்கிருர் அவரை எதிர்த்துக் கூட்டம் போடுவதற்கு? குயுக்தி என்ற பெயரை வைத்துச் சிலர் பிழைக்கப்பாக்கிருர்கள். குயுக்தி என்று கூறினல் ஜனக்கூட்டம் அதிகமாகத் திரளும். அதில் கொஞ்சம் கஷ்ட நிவாரண அந்தியகால சகாய நிதிகளுக்குப் பிரசாரம் செய்து பார்க்கலாம். இப்படிச் சில எத்தர்கள் வியாபார தந்திரத்தைக் கையாண்டால் அந்த வலையில் ஏமாந்த பண்டிதர்கள் சிக்கித் தம் சொந்த வயிற்றெரிச்சலைக் கொட்டிவிட்டுப் போகட்டுமே, நமக்கென்ன?

ஃ

எல். தருமராசா, மட்டக்களப்பு.

கே: மட்டக்களப்பு இம்பீரியல் தியேட்டரில் கட்டப்பொம்மன் படம் ஓடும் போது கைதட்டலும், சீழ்க்கை அடித்தலும் பலமாக இருக்கின்றனவே கேள்விப் பட்டீர்களா?

ப: கேள்விப்பட்டேன். எட்டப்பன் தோன்றும் ஒவ்வொரு கட்டத்திலும் "இதோ போகிருன் எதிர் மன்னன்!" என்று மக்கள் ஏளனமாகக் கூக்குரல் இடுகிருர்கள், சீழ்க்கை அடிக்கிருர்கள், கை தட்டித் துரத்துகிருர்கள் என்று கேள்விப் பட்டேன்.



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 9.

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு "காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே?" என்ற முதலடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

— ஆசிரியர் : சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183,
> கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு தேதி
15—9—59

"காட்டிக் கொடுத்த
கயவர் வரிசையிலே"


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,
எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.
என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுண்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி(EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.
வணக்கம்

திரு. அ. ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு
டாக்டர்.

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## அங்கீகாரத்திற்குப் போராட்டம்-2

**சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).**
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி.

**1871-ல்** நிறைவேற்றப் பெற்ற தொழிற் சங்கச் சட்டத்தில் பொதிந்திருந்த விசேட அம்சங்களைச் சுருக்கமாக முன்னர் எடுத்துக் கூறினோம். அவற்றுள் இரண்டாவது அம்சமாக குறிப்பிடப்பட்ட உள் நடவடிக்கைகளில் சுயாட்சி உரிமை (Autonomy in Internal Affairs) என்ற நியமம் சமூகத்தில் தொழிற் சங்கங்கள் பொறுப்பு வாய்ந்த சீரிய அந்தஸ்து உடைய ஸ்தாபனங்கள் என்பதை அங்கீகரித்தது எனலாம். ஆகவே இந்த அம்சத்தின் விவரங்களையும் அவற்றின் கண் தொக்கிருக்கும் தகைமையையும் சொற்பம் விரிவாக கண்ணுறல் வேண்டும்.

### சட்டத்தின் நாலாம்பிரிவு

குறிப்பிட்ட சட்டத்தின் 4-ம் பிரிவின் பிரகாரம் கீழ்க் காட்டப்பட்ட வகையான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்யும்படி நிர்ப்பந்திக்கவோ அன்றேல் பூர்த்தி செய்யப்படாத காலை நட்டஈடு கோரி நீதித் தலங்களில் வழக்குத் தொடரவோ முடியாது:-

1. அங்கத்தவர்களின் தொழிற் சேவையைப் பொறுத்த வேதன விவரங்களைப் பற்றி அவர்கட்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகள்.

2. அங்கத்தவர்கள் இறுக்க வேண்டிய சந்தாப் பணம் அல்லது தண்டப் பணம் பற்றிய உடன்படிக்கைகள்.

3. தொழிற் சங்க நிதியை—

(அ) உறுப்பினரின் நட்புறவு நயங்கட்கு உதவும் வகை செய்தல்;

(ஆ) குறித்த தொழிற் சங்கத்தின் தீர்மானப் பிரகாரம் அமைந்து நடக்கும் உறுப்பினரல்லாப்பிறர்க்கு உதவுதல்;

(இ) தொழிற் சங்கத்துடன் தொடர்புடைய எவர் மேலும் நீதித் தலத்தில் விதிக்கப் பெற்ற அபராதத்தை யிறுத்தல்.

ஆகியவற்றைப் பற்றி சங்கத்தில் ஏற்படும் உடன்படிக்கைகள்.

4. இதர தொழிற் சங்கங்களுடன் ஏற்படும் உடன்படிக்கைகள்.

5. மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாக எழும் சகல உடன்படிக்கைகள்.

### சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட தராதரம்

அதாவது மேலே கூறிய தொடர்ச்சியில் எழும் தகராறுகளைப் பற்றி யாரேனும் நீதித்தலங்களில் வழக்குகள் தொடரின் அவ் வழக்குகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள நீதி மன்றங்கட்குத் தராதரம் இல்லை. அவ்விடயங்களைப் பற்றிய தகராறுகள் நீதி மன்றங்களின் அதிகார எல்லைக்குப் புறம்பானவை என்று சட்ட மூலமாக விதிக்கப் பெற்றது. இத் தகராறுகளைப் பற்றி தொழிற் சங்கங்கள் தாமே முடிவாக நிர்ணயிக்கும் தகைமையைப் பெற்றன.

இந்தத் தராதரத்தைத் தொழிற் சங்கங்கட்கு சட்ட மூலமளித்திராவிடில் சங்கங்களில் அல்லது சங்க நிர்வாகத்தில் மனவிகற்பம் கொண்ட எவரும் அச் சங்கங்களை வழக்குகள் மூலம் நீதித் தலத்தில் இழுத்து சங்கங்களின் ஒற்றுமையையும் செல்வாக்கையும் பங்கப்படுத்தி அச் சங்கங்களை வளர்ச்சியும் சித்தியுமெய்தவிடாது குன்றிப்போகச் செய்யலாம். இந்த அம்சம் 1871-ல் இயற்றப்பெற்ற சட்டத்தில் இடம் பெறுவிடில் தொழிற் சங்கங்கள் ஒருக்காலும் சீரிய முறையில் வளர்ச்சியெய்தவோ வலிமை பெறவோ முடியாது.

### கட்டாயப் பதிவு நிபந்தனை இல்லை

1871-ம் ஆண்டுச் சட்டத்தில் காணப்படும் வேறு ஒரு விசேடமும் இங்கு குறிப்பிடத்தக்கது. தொழிற் சங்கங்கள் எதுவும் பதியப்பட வேண்டும் என்று கட்டாயப் படுத்தும் வசனம் எதுவும் அச் சட்டத்தில் இல்லை. பதியப்பெற்ற சங்கங்கள் சில உரிமைகட்கு லாயக்கானவை என்று மாத்திரம் விதிக்கப்பெற்றது. பதியப் பெற்ற சங்கங்கள் குறிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகட்கும் ஒழுங்குப் பிரமாணத்திற்கும் அமைந்திருக்க வேண்டும். அத்தகைய கட்டுப்பாடுகளும் ஒழுங்குப் பிரமாணங்களும் தொழிற் சங்கங்கள் சீரிய முறையில் நிர்வகிக்கப்படுவதற்கு ஏதுவானவையே யன்றி வேறு எவ்வகையான நோக்கத்தையும் கொண்டனவல்ல.

### சாதகமான சூழ்நிலை

தொழிற் சங்கங்கள் தம் சொந்தத் தீர்மானத்தின் பேரில் தான் பதிய முன்வருவதும் பதியப்பெற்ற சங்கங்கட்கென சட்டத்தில்விதித்த கட்டுப்பாடுகட்கு அமைந்து நடப்பதும். இந்த நிலைமை, அதாவது பதியப்பெற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படாத நிலைமை, தொழிற் சங்கங்கள் தாமாகவே தம் நிர்வாகத்தைச் சீர் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்தற்கும் பொறுப்பு வாய்ந்த முறையில் நடப்பதற்கும் உதவியாயிருந்தது. மேலும் உள் நடவடிக்கைகளில் சுய ஆட்சி அந்தஸ்தும், தாமாகவே தம் நிர்வாகத்தைச் சீர் படுத்த வேண்டும் என்ற கோட்பாடும் தொழிற் சங்கங்கள் பொறுப்பு வாய்ந்தனவும் செய்திறமையுடையனவுமான ஸ்தாபனங்களாக வளர்ச்சியெய்தவும் உவப்பாக இருந்தது.

### வேலை நிறுத்தத்துக்கு எதிரான ஷரத்து

இவ்வளவு சாதகமான முறையில் அமைந்ததொழிற் சங்கங்கள் சித்திகரமான முறையில் முதலாளிகளுடன் பேரம் பேசுதற்கு இன்றியமையாத வேலை நிறுத்தம் என்னும் ஆயுதத்தைப் பிரயோகித்தற்கு இடையூறான சில ஷரத்துக்களை உட்புகுத்திவிடும் தர்ம சங்கடமான நிலையேற்பட்டது. அதாவது வேலை நிறுத்தக் காலங்களில் சக தொழிலாளர்களை வேலைக்குப் போகாதுவசீகரிக்கவோ, ஏவவோ எடுக்கும் பிரயத்தனங்கள் 'கிறிமினல்' குற்றகதுக்குரியவை யென்று விதிக்கும் சில வசனங்களை அதே சட்டத்துள் புகுத்தவே அரசாங்க

(12-ம் பக்கம் பார்க்க)

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கத் தொண்டர்கள் பலர் தங்கள் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் உணர்ச்சி ததும்ப எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வமும் உறுதியும் தமிழியக்கம் மிகு விரைவில் எங்கும் பரவி நிலைக்கும் எனும் நம்பிக்கையை உண்டாக்குகின்றன.

முகவரிகளைத் தமிழில் எழுதினுல் இலங்கையின் பல பகுதிகளுக்கும் தமிழ் நாட்டுக்கும் தபால்கள் போய்ச் சேருமா என்று தமிழ் மக்கள் பலர் சந்தேகத்துடன் வினவுகிறார்கள். இவர்களுக்குக் கொழும்புப் பிரதம அஞ்சல் நிலையத்தில் கடமையாற்றும் தமிழியக்கத் தொண்டர் ஒருவர் எழுதியனுப்பிய உரையின் ஒரு பகுதி, நம்பிக்கை ஊட்டத்தக்கது. ஆகையால் அதனைக் கீழே தருகிறோம்:

### தமிழில் முகவரி

"நமிழரே தம் தாய் மொழியைப் பயன்படுத்தாது செவிடராய் ஊமையராய் வாழ்ந்தால் நாம் யாரைக் குறைகூற முடியும்?

"நான் கடந்த இரண்டு வருடங்களாக எனது கடிதப் போக்குவரத்து முதலிய யாவற்றையும் தமிழிலேயே செய்கின்றேன். எவ்வித தொந்தரவுகளுக்கும் தான் இலக்காகவில்லை. இங்கிரியா, மாறவில, கண்டி, வதுளை, மாத்தறை முதலிய இடங்களுக்கும் தமிழிலேதான்விலாசம் இடுகின்றேன். நான் அனுப்பும் கடிதங்கள் எவ்வித தடங்கலுமின்றிப் போய்ச் சேர்கின்றன.

"என் நண்பர்கள் பலருக்கு இச் செய்தியைக் கூறி அவர்களையும் தமிழுக்கு மதிப்பளிக்குமாறு கேட்டேன். சிலர் உடன்பட்டனர். ஆனுல் பலர் செவிடரும் குருடருமாகக் காணப்பட்டனர்.

### ஒதுக்க வேண்டும்

"இனி ஒரு விதி செய்வோம். அதை எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டும், தமிழியக்கத்தை ஆதரிக்காத தமிழனைத் தூற்றுதல் வேண்டும். தன்மானமுள்ள தமிழ் மக்கள் தமிழிலேயே காரியமாற்றுவார்கள். மானங்கெட்டவர்கள், வயிற்றுப் பிழைப்புக்கு இனத்தை விற்பவர்கள், மதில்மேற் பூனைபோலத்தான் இருப்பார்கள். இவர்களை அம்பலப்படுத்தி ஒதுக்க வேண்டும் இத் தமிழ்த் துரோகிகளின் பட்டியலையும் அமைக்க வேண்டும்.

"எம்மால் இலகுவிற் செய்யக்கூடிய இந்தப் பணியைத் தானுஞ் செய்யத் தயங்கும் எமக்கு போராட்டம் எதற்கு? தமிழ்ப் புறக்கணிப்பைப்பற்றிப் பேச என்ன உரிமையுண்டு? தமிழ்மொழியையும் தமிழ் பேசும் இனத்தையும் காப்பாற்றச் சபதம் செய்யுமுன் ஒருவன் தான் தமிழனுக வாழ, தமிழிலே தன் கடமைகளைச் செய்யப் பழகல் வேண்டும்..." என்று இப்படி அவர் எழுதியிருக்கிறார்.

### கோழைகள்

இந்தத் தொண்டரின் உணர்ச்சியும் துடிப்பும், ஆயிரம் தொண்டர்களுக்கு உண்டானுல் தமிழ் வாழும்; மதிப்புப் பெறும். இந்தத் தொண்டர்போலப் பன்னூற்றுக் கணக்கான தொண்டர்களும் அன்பர்களும் தமிழிலேயே தம் கருமங்களைச் செய்கிறார்கள்; தமிழிலேயே முகவரி எழுதுகிறார்கள். கொழும்புத் தமிழ்ச் சங்கம், தமிழ் மறைக் கழகம் முதலிய நிலையங்களும் தமிழிலேயே தம் கருமங்களை ஆற்றுகின்றது. ஆகையால் தமிழிலே எழுதினுல் பல இடர்கள் உண்டாகுமே என்று எண்ணுபவர்கள் கோழைகளே; தமிழுக்காகச் சிறு தியாகத்தையும் செய்ய விரும்பாதவர்களே.

மேலும் முயன்று இவர்களையெல்லாம் வழிப்படுத்த வேண்டியது நமது தமிழியக

(12-ம் பக்கம் பார்க்க)

# கடவுளுக்குக் கடிதம்

அப்பனே இறைவா, சில காலமாக இலங்கையில் வேலை நிறுத்தம் எதையும் காணவில்லையே என்று அங்கலாய்த்து எழுதிய உங்களுடைய கார்ட்டுக்கும் பதில் எழுத முடியாதவாறு செய்து விட்டது இந்தத் தபால் ஊழியரின் வேலை நிறுத்தம்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக பெரிய தபால் நிலையத்தில் குவிந்து கிடந்த கடிதங்களைப் பற்றி நான் அறிந்த மாத்திரத்தில் (F) பையும் கெட்டு நொலெட்ஜ் ஜும் கெட்டுப் போனதால் (அதாவது ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு என்பதை ஆங்கிலத்தில் சொன்னேன்) உங்களுக்கு விஷயத்தை கம்பிமூலம் தெரிவித்து விடலாம் என்று எண்ணி, கொட்டாஞ்சேனைச் சந்தியில் பொது மக்களின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள தொலைபேசியை நாடினேன். அதற்கோ நாடி உடைந்து வாய் வெடித்துச் சிதறி இருப்பதைக் கண்டேன்.

கண்டதோடு விடுவேனு? ஆட்டுப்பட்டித் தெரு-விவேகானந்த மேட்டுச் சந்தியில் இன்னொரு பொது மக்கள் பாவனைக்குரிய தொலைபேசி இருப்பதை ஞான திருஷ்டியால் கண்டு பிடித்து அங்கு ஓடினேன். முந்தியதற்கு வாய் மட்டும் தானே இல்லை; இதற்கு வாயும் இல்லை காதும் இல்லை. இப்படி இன்னும் எத்தனை கிடந்து ஈழத்தின் தலைநகரைச் சிறப்பிக்கின்றனவோ அறியேன். இவைகளையெல்லாம் நான் சொல்லியா கவனிக்கப் போகிறார்கள்!

கவனிக்கப்படும் என்ற தலைப்பில் தபால் ஊழியர் விஷயமும் சேர்க்கப்பட்டு அவர்கள் இப்போ வேலைக்குத் திரும்பி கடிதக் குப்பைகளை ஒதுக்கி வருவதாகத் தெரிகிறது. கவனிக்கப்படும் லிஸ்டில் தமிழில் தகுதிப் பரீட்சை சித்தியடைந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கும் விஷயமும் சேர்க்கப்பட்டதல்லவா? அஃது அவ்வாறிருக்க, சிங்கள தட்டெழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் வெளியூர் அரசாங்க குமாஸ்தாக்களுக்கு போனஸாக ரூபா 120/- வழங்க அரசாங்கம் இன்னொரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

திட்டம் திட்டமாக நான் போட்டுக் கொண்டே வர நீங்கள் ஆகாயத்தில் குஷாலாக உட்கார்ந்து கொண்டு எல்லாவற்றையும் மட்டம் செய்துவிடுகிறீர்கள். இன்னும் இரண்டொரு மாதத்

(9-ம் பக்கம் பார்க்க)

தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றேட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணியின் உள்ளத்து உயர்வும் ஒற்றுமை நாட்டமும்

## அவர் வாழ்ந்த திருநெல்வேலி 'தமிழ் வேலி'யாக மாறிவிட்டது

### பாராட்டு விழாவில் பண்டிதர் இரத்தினம்

### தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தில் பண்டிதமணிக்கு இடம்: மாஜி வட்டுக்கோட்டை எம். பி. வற்புறுத்து

"பண்டிதமணி கணபதிப்பிள்ளை உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டு உயர்ந்த வாழ்வு வாழல் வேண்டும் எனும உயரிய கொள்கையினை உடையவர். இதனைத் திருவள்ளுவர் திருநாள்பற்றிச் சிலர் பொறுமையால் விளைத்த பூசலின்போது அவர் எனக்கு அனுப்பிய கருத்துரை தெள்ளத் தெளியக்காட்டுகிறது" என்று தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. கா. பொ. இரத்தினம் பண்டிதமணிக்கு அவருடைய பழைய மாணவர்கள் நடத்திய பாராட்டுவிழாவில் பேசினார். விழா கடந்த மாத இறுதியில் திருநெல்வேலி சைவ வித்தியாசாலையில் நீதிபதி திரு சி. தம்பித்துரை தலைமையில்நடந்தது இரண்டாம் நாள் விழா பண்டிதமணியின் சொந்த ஊரான மட்டுவிலில் பண்டிதமணி மணி மண்டபத்தில் திரு. வி. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இரு தினங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: "உலகெலாம் வாழுந் தமிழரை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் சாதி மத அரசியல் கட்சி வேறுபாடுகளின்றித் திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் வைகாசி அனுடத்தில் கொண்டாடுமாறு எமது தமிழ்மறைக் கழகம் வேண்டுகோள் விடுத்தது. உலகமெங்குமுள்ள தமிழ் மக்கள் எமது வேண்டுகோளின் நோக்கத்தை உணர்ந்து எமது கழகத்தின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். தமிழ் மக்களின் இப்பேராதரவைக் கண்டு பொறுமைகொண்ட சிலர் 'ஐயகோ பண்டிதர் இரத்தினம் நாவலர் குறித்த நாளை மாற்றுகிறாரே' என்று ஓலமிட்டனர். இவர்களின் வாயை மூடச் செய்தற்காக என் நோக்கம்பற்றிப் பண்டித மணியின் கருத்தை அறிவிக்குமாறு கேட்டேன்.

#### அருமையான கருத்து

"அவருடைய தமிழ் உள்ளத்திலிருந்து அருமையான கருத்துகள் மலர்ந்தன.

'தேசத்தை அணி செய்த மகானுக்கு நல்லதொரு வசந்தகாலமும் வாய்த்திருக்கிறது. இந்த நல்ல காலத்திலே தாய்நாடும் சேய்நாடும் ஒன்றுபடுவதாக, சேய் நாட்டிலே கீழ்நாடும் வடநாடும் ஒருமை உறுக'

"இவை அவருடைய வாக்குகள். ஈழத்தின் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் பிரித்தொடுக்க இந்நாளில் சிலர் குத்துக்கரணங்கள் போடுகிறார்கள். தமிழாலே பிழைக்கிறவர்களே தமிழரைப் பிரிக்க முனைகிறார்கள். இச்சூழ்நிலையில் பண்டிதமணியின் உள்ளம் ஆறாண்டுகளுக்குமுன் வடக்கையும் கிழக்கையும் ஒன்றுபடுத்த விழைந்த அருமைப்பாடுதான் என்னே! இத்தகைய உயர்ந்த உள்ளம் இந்நாளிலே தம்மைத் தமிழறிஞர்கள் என்று பறையறைந்துகொண்டு புலமைக் காய்ச்சலாலும் தாழ்வு மனப்பான்மையாலும் உந்தப் பெற்றுப் பிரிவினை குரல் எழுப்புபவர்களுக்கு இருக்குமெனில், தமிழுக்கு எவ்வித இடரும் உண்டாகாதன்றோ!

#### புலமைக் காய்ச்சல் இல்லை

"எங்கள் பண்டிதமணியிடம் புலமைக் காய்ச்சல் என்பதே கிடையாது. தமிழ் படிக்கும் யாவரும் நல்வாழ்வு வாழல் வேண்டும் என எண்ணும் பேருள்ளம் படைத்தவர் அவர். இதனாலேதான் பல பகுதிகளிலிருந்தும் தமிழார்வம் படைத்தோர் அவரை நாடிவந்த



பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

னர். ஒருமுறை அவரைக் கண்டு உரையாடிய எவரும் அவருடைய பேரன்பையும் தமிழார்வத்தையும் மறக்கமாட்டார்கள். அவருடைய சந்திப்பால் தமிழார்வம் பெற்றுத் தமிழறிந்தோர் பலர்.

#### ஊருக்கு பெருமை

"பண்டைக்காலத்திலே பரந்து விளங்கிய குமரிக் கண்டத்துக்குப் பொதியம் தமிழ் வளர்க்கும் மையமாக விளங்கிற்று. குமரிக்கண்டம் கடல்வாய்ப்பட எஞ்சிய தமிழகத்துக்கு மதுரை தமிழ் வளர்க்கும் நிலையமாக விளங்கிற்று.

"ஈழத் தமிழகத்திலே யாழ்ப்பாண அரசர்கள் காலத்திலும் ஆறுமுக நாவலர் காலத்திலும் நல்லூர் தமிழ் வளர்ச்சியின் மையமாக இருந்தது. சென்ற முப்பதாண்டுகளாக நல்லூரின் பெருமையைத் திருநெல்வேலி பெற்று உயர்ந்துவிட்டது. பண்டிதமணி வாழ்ந்ததால் இத் திருநெல்வேலி சென்ற ஒரு தலைமுறை காலமாகத் தமிழ் வேலியாகக் காட்சியளித்தது.

#### கண்டனத்தின் சிறப்பு

"பண்டிதமணியை 'ஒரு கண்டனக்காரர்' எனச் சிலர் முன்னர் கருதிய துண்டு. தமிழ்ப் புலவர் பெருமையை அறியாமையே இதற்குக் காரணம். அறத்துக்கு—நீதிக்கு—மாறாகச் செயலாற்றுபவர்களைக் கண்டிப்பதற்குத் தமிழ்ப் புலவர்கள் பின்னிற்பதில்லை. தமிழுலகிலோ, சைவ உலகிலோ, பிறவற்றிலோ அநீதிகள் நடைபெற்றால் பண்டிதமணி அவற்றைக் கண்டிப்பதுண்டு. இக்கண்டனம் உள்ளத்திலிருந்து உயர்ந்த நோக்கத்துடன் வெளிவருவதாகையால் கண்டிக்கப்படுவோரைத் தாக்கித் திருத்தும் பேராற்றலுடையது. எனினும் அவருடன் பழகியவர்களுக்கு அவருடைய உள்ளத்தின் தண்ணளி நன்கு தெரியும். சொந்தக் காரணங்களுக்காக எவரையும் தாழ்த்திக் கூறாத பெரும் பண்பு அவரிடம் நிலைத்து விளங்குகிறது.

#### தமிழ்நாடும் நன்கு அறியும்

"அவருடைய பெருமையை ஈழத் தமிழகம் மட்டுமின்றித் தமிழ்நாடும் நன்கறியும். சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் அணிமையில் கொழும்புக்கு வந்திருந்தார். இந்த ஆண்டு நடைபெற்ற எழுத்தாளர் சங்க மாநாட்டில் அவரைப் போற்ற முடியாது போனமை குறித்து கவலைப்பட்டார். அடுத்த ஆண்டு மாநாட்டில் அவரைப் போற்றுதற்கு ஒழுங்கு செய்வார்கள் என்று சொன்னார்.

#### தமிழுக்கு முதன்மை

"பண்டிதமணியை நாம் போற்றுவது தமிழைப் போற்றுவதற்கு நிகராகும். இன்னும் நம் மக்கள் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் நன்கு போற்றப் பழகவில்லை. தமிழ்ப் புலவர்களும் பண்டிதர்களும் ஆசிரியர்களும் இன்னும் தமிழுக்கு முதன்மை கொடுக்காதிருக்கும் நிலைமையில் பொதுமக்கள் தமிழை மதித்துப்போற்றவில்லை என்று குறைகூறுவதில் பயனில்லை. தமிழ் படித்தவர்கள் தமிழால் வாழுகின்றவர்கள் ஒன்றுபட்டுத் தமிழுக்குத் தம் வாழ்வுத் துறையனைத்திலும் முதன்மை கொடுத்தல் வேண்டும்"— இவ்வாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறி முடித்தார்.

#### கனகரத்தினம் பேச்சு

"தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றைச் சமீபத்தில் நிறுவியிருக்கிறார்கள். அதில் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளைக்கு அவசியம் இடம் ஒதுக்க வேண்டும். தமிழ் ஆராய்ச்சிக் கழகம் தமிழறிஞர் பணியைத் தனதாக்கிக் கொள்ளவில்லையானால் அப்படி ஒரு கழகம் இருந்துதான் என்னபயன்?"- இவ்வாறு பாராட்டு விழாவில் பேசிய வட்டுக்கோட்டை பிரமுகர் திரு. கே. கனகரத்தினம் கேட்டார்.

திரு. கனகரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

#### மதிப்பு யாருக்கு?

"அரசியல் வாதிகளுக்கு அளிக்கும் மதிப்பை தமிழறி

(9-ம் பக்கம் பார்க்க)


வர்த்தக ஸ்தாபனப் புகுவிழா அழைப்பு

எமது வர்த்தக ஸ்தாபனத்தின்
புதிய இல்லம்
கொழும்பு, புறக்கோட்டை
பெங்ஷால் வீதி 63-ம் இலக்க
கட்டிடத்தில்
நிகழும் 1959-ம் ஆண்டு, செப்டெம்பர் மீ 14-ம் உ
திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு
செவலியர், சேர் சிற்றம்பலம் காடினர்
அவர்களாலும்
காடினர் சீமாட்டியாராலும்
வெகு விமரிசையுடன் திறந்து வைக்கப்படவிருப்பதால்
எமது போஷகர், வர்த்தக உறவினர், நண்பர்கள்
யாவரையும் அவ் வைபவத்துக்குச் சமுகமளிக்குமாறு
வினயமுடன் கேட்டுக்கொள்கிறோம்

வெஸ்டன் ஏஜென்ஸீஸ் (1940)
கிங்ஸ்லி (1958)
கொழும்பு.

போன்: 2885 தந்தி: WESTON


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தமிழாக இன்றும் இருக்க தொண்டாற்றிய பெரியார்

## ‘வடமொழியின்றி வண்டமிழுக்கு வாழ்வேது?’

### இப்படி வாய்விட்டுக் கேட்ட மணிப்பிரவாளப் பண்டிதர்களுக்கு தனித் தமிழின் இனிமை காட்டிய மறை மலை அடிகளாரின் மாண்பு

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே” என்ற திருமூலர் திருமொழிக் கிணங்க தமிழுக்காகப் பிறந்து, தமிழுக்காக வாழ்ந்து, தமிழுக்காக மறைந்த தமிழ்ப் பெரியோர் வரிசையில் மறைமலையடிகளுக்கு தலைமையிடம் உண்டு.

செயற்கரியனசெய்த செம்மல்களை செந்தமிழ் உலகம் உவப்புடன் போற்ற வேண்டுமென்பதை எவரும் எடுத்துரைக்க வேண்டியதில்லை. அதற்கொப்ப 15-9-50-ல் மறைந்த மறைத்திரு. மறைமலையடிகளை இன்று நினைவு கூருதல் சாலவும் சிறப்புடைத்து.

#### தமிழ்-காலப் பிரிவு

மறைமலையடிகளின் வரலாற்றை எண்ணும் போது தமிழ் மொழியின் வரலாற்றையும் நினைவு படுத்த வேண்டியிருக்கின்றது. தமிழ் மொழியின் வரலாற்றை சங்க காலம், சங்கம் மருவிய காலம், இன்றைய காலம் எனமுப்பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். சங்க காலத்தில் தமிழில் பிறமொழிக் கலப்பு நூற்றிற்கு இரண்டு விழுக்காட்டிற்கு மேலாகக் கலந்ததில்லை. அதையடுத்த காலங்களில் தமிழிலே பிறமொழிக் கலப்பு படிப்படியாகக் கூடிக் கொண்டு வந்தது. முதலில் வட மொழி கலந்தது, தொடர்ந்து அரபி, போத்துக்கேய, ஆங்கில, இந்தி மொழிச் சொற்கள் கலந்தன. இந்த நிலை தொடர்ந்து நீடித்திருப்பின் தமிழ் என்ற பெயரோடு ஆனால் தமிழ் என்று சொல்ல முடியாத ஒரு கலப்பு மொழியே உருவாகியிருக்கும்.

#### பெயர் மாற்றம்

காலத்திற்குக் காலம் ஞாலத்தில் காலத்தால் சாகாத பணியாற்றும் சான்றோர் தோன்றுவர் என்று திரு. வி. க. அடிக்கடி கூறுவார். தமிழ் மொழி தனது தன்மையையும், தமிழ் இனம் தன் நிலைமையையும், தமிழகம் தன் வளம் செறிந்த வரலாற்றையும் மறந்திருந்த காலத்திலே தான் மறைமலையடிகள் தோன்றினார். அன்னாரின் தோற்றம் தூங்கிக் கிடந்த தமிழகத்தை துடித்தெழச் செய்தது. “தமிழன் என்றோர் இனம் உண்டு—தனியே அவர்க்கொரு குணம் உண்டு—அமிழ்தம் அவனது மொழியாகும்” என்று வாயளவில் வாழ்த்தொலி எழுப்புவது போதாது. தமிழன் தமிழனாக வாழ வேண்டின் அவனது பேச்சில், எழுத்தில், சிந்தனையில் செயலில். மொழி

ஈழவேந்தன்

யில் தூய்மை துலங்க வேண்டும் என்று உணர்ந்த சுவாமி வேதாசலம் தமது பெயரில் வட மொழியின் வாடை வீசுவதை உணர்ந்தார். உடனே தம் பெயரையே ‘மறைமலையடிகள்’ எனத் தூய தமிழில் மாற்றிக் கொண்டார்.

இவரின் இச்செய்கை வட மொழியையே தமது வாழ்வளிக்கும் தெய்வம் எனக் கொண்ட பலரின் சிந்தையைக் கலக்கியது; சீற்றமும் கொள்ளச் செய்தது. “வட மொழியின்றி வண்டமிழுக்கு வாழ்வேது? இது மறைமலையின் சிறுமதி படைத்த செயல்” என்றனர். மறைமலையடிகளாரோ சிறுமதி யாருக்கு உண்டென்பதை வருங்காலம் உணர்த்தும் என்று கூறித் தம்கொள்கையை தொடர்ந்து நிலைநாட்டினார். இன்னும் அன்னவரைத் தொடர்ந்து கலியாணசுந்தரம் மண வழகனாகவும், கனகேந்திரன் ஈழவேந்தனாகவும், பாலேந்திரன் இளங்கோவாகவும் சோமசுந்தரம் மதியழகனாகவும், பாலசுந்தரம் இளவரசனாகவும், பாலசுப்பிரமணியம் இளமுருகனாகவும், மீனாட்சி அங்கயற்கண்ணியாகவும், சரஸ்வதி கலைமகளாகவும், லக்ஷுமி திருமகளாகவும், ஈஸ்வரி இறைவியாகவும் மாறிவிட்டனர். இது மறைமலையின் பணியின் மாபெரும் வெற்றியல்லவா?

#### தனித் தமிழ்

மற்றும் எம்மிடையே நிலவிய வட சொற்களான அக்கிராசனர் தலைவராகவும், காரியதரிசி செயலாளராகவும், பொக்கிஷதார் பொருளாளராகவும், போஷகர் காப்பாளராகவும், பிரதம மந்திரி முதலமைச்சராகவும், கோஷ்டி குழுவாகவும், சங்கீதம் இசையாகவும், ராகம் பண்ணாகவும் மாறியது யார் செய்த பணியின் பயன் என்பதை பைந் தமிழர் சிந்திப்பார்களாக. அணிமையில் தென்னகத்தின் தலை நகராம் சென்னை நகராண்மைக்கழகத்தில் ஸ்ரீயும் ஸ்ரீமதியும் நீக்கப்பட்டு ‘திரு’வும் ‘திருமதி’யும் ஆட்சி செய்யத் தொடங்கியதை யிட்டு எந்தத் தமிழ் மகன் தான் மகிழ்ச்சியடையாது இருக்கக் கூடும்?

#### கலைச் சொல் ஆக்கம்

மேலே கூறியவற்றில் இருந்து ஏதோ வட சொல் நீக்குவதிற்றான் மறை மலையடிகள் கவனம் செலுத்தினார், இன்றைய தமிழ் மக்களின் இன்றியமையாத தேவையாக விளங்கும் கலைச் சொல்லாக்கத்திற்கு அவர் என்ன பணியாற்றினார் என்று பலர் கேட்கக்கூடும். இதோ அவர் ஆங்கிலத்திற்கு நேராக அளித்த அருந் தமிழ்ச்சொற்கள். Telepathy-தொலைவில் உணர்தல், Telephone-தொலைபேசி, Telescope- தொலைநோக்கி, Clairvoyance-அறிதுயில், Engineering-பொறியியல், medicine மருத்துவம், science அறிவியல், Protein-முதலுணா, Carbohydrates-இனிப்புணா, Vitamins-உய்வுறை என்று இப்படி இன்னும் பல கூறலாம்.

#### ஆக்கிய நூல்கள்

மறைமலையடிகள் செய்த மொழிச் சீர்திருத்தம் ஒன்றே அவரின் பெயர் தமிழ் மொழி வரலாற்றோடு கலப்பதற்குப் போதுமானதாகும். ஆனால் தமிழ் மலையாம் மறைமலை இத்துடன் மனநிறைவடைய முடியுமா? அன்னார் ஆக்கி அளித்த நூல்கள் ஏறக்குறைய ஐம்பதிற்கு மேலாகும். அவற்றை வரலாறு, ஆராய்ச்சி, நெறி (சமயம்), திறன் ஆய்வு (Literary Criticisim), மருத்துவம், அறிவியல், புனைகதை, கவிதை, மொழி பெயர்ப்பு, மெய்விளக்கம் (தத்துவம்) எனப் பலபடப் பிரிக்கலாம்.

“மாணிக்கவாசகர் காலமும் வரலாறும்” தமிழர் மத்தியில் அவரின் ஆராய்ச்சித் திறனை எடுத்துக் கூறுகின்றது. “சிந்தனைக் கட்டுரைகள்” அவரின் ஆங்கில நுண்ணறிவையும் மொழி பெயர்ப்புத் திறனையும் எடுத்துக் காட்டுகின்றது. “சிறுவர்க்கான செந்தமிழ்” குழந்தைகளின் மன வளர்ச்சியை உணரும் அவரின் உளத்தியல் அறிவை எடுத்து இயம்புகின்றது. “மக்கள் நூறுண்டு உயிர் வாழ்க்கை” அவரின் வியத்தகு மருத்துவ அறிவை மாசற்ற முறையில் அறைகின்றது. “முற் காலப் பிற் காலப் புலவோர்” அவரின் இலக்கியத் திறன் ஆயும் திறனை இனிது எடுத்து இயம்புகின்றது.

“சகுந்தலை நாடக ஆராய்ச்சி” அவரின் வட மொழிப் புலமையையும் மொழிபெயர்க்கும் ஆற்றலையும் நலன் ஆயும் திறனையும், குறைகள் கண்டவிடத்து, ஆக்கியோன் பெருங் கவிஞன் காளிதாசன் ஆயிற்றே என்றுகூடப் பார்க்காது அவற்றைப் பண்போடு எடுத்துக் கூறிய துணிவையும் கண்டு இன்புறலாம். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சைவசித்தாந்த மெய்விளக்கம் (Saiva Siddhantha Philosophy) அவரின் ஆங்கில அறிவின் ஆழத்தை அழகுற எடுத்து உணர்த்துகிறது. சிந்தனைக்கு விருந்தளிக்கும் இவரின் ஏனைய நூல்களையும் எடுத்து விளக்கின் மிக விரியும் என அஞ்சுவதால் அவற்றின் சுவையை அன்னாரின் நூல்களை நுகர்ந்து உணர்க என விடுப்பாம்.

#### செஞ் சொற் செம்மல்


எழுத்துத் துறையில் எழில் உற விளங்கும் பலர் பேச்சுத் திறன் அற்றவராகவே காணப்படுவர். எனினும் இவ்விரண்டும் வியத்தகு முறையில் மறை மலையடிகளிடம் குடிகொண்டிருந்தன. “சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது” என்ற குறள் எம் மறை மலைக்கு அப்படியே அமையும். அன்னார் சொற்பெருக்கில் சொற் செறிவும் பொருள் அழகும் கொஞ்சிக் குலவும் பொழுது மக்கள் மெய்மறந்து “வென்றது தமிழ்” என்பர்.

#### இந்தி எதிர்ப்பு

மூதறிஞர் எப்போதும் முன் கூட்டி உணர்வர் என்பது தமிழன்கண்ட உண்மை. இதற்கிணங்க 1938லே இந்தியை இந்தியாவின் பொது மொழியாய் ஆக்கும் நோக்குடன் தமிழகத்தின் முதல் அமைச்சராய் இருந்த இராஜாஜி அங்கு அதைத் திணிக்க முயன்றபோது சமய மொழியாக வந்த வடமொழியிலும் பார்க்க அரசியல் மொழியாய் வரும் இந்தியால் தமிழ் இனத்திற்கு ஏற்படும் இன்னல்கள் சொல்லில் அடங்கா என்று கூறி அன்றே போர்க் குரல் எழுப்பியவர்

(13ம் பக்கம் பார்க்க)

## வேணுகோபால்-பத்மாவதி



தென் இந்திய பிலிம் பெடரேஷன் தலைவரும் விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜிங் டைரக்டருமான திரு நாகிரெட்டியின் புதல்வர் திரு. வேணுகோபாலுக்கும் விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜிங் டைரக்டர் ராமண்ண ரெட்டியின் புதல்வி செல்வி பத்மாவதிக்கும் அணிமையில் திருமணம் நடைபெற்றது.

இதையொட்டி கோடம்பாக்கம் விஜயா பூங்காவில் நடைபெற்ற வைபவத்தில் சென்னை கவர்னர் விஷ்ணுராம் மேதி, ராஜாஜி, மேயர் ஏ. பி. அரசு, ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சிவி ரெட்டியும் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலரும் ஏராளமான சினிமா நடிகர், நடிகைகள், கலைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

பிரதமர் நேரு, சென்னை முதன் மந்திரி காமராஜ் முதலானோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள். தம்பதிகளுக்கு பல அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

—படம்: சென்னை நிருபர் ஈழத்தாசன்.

## சௌக்கிய போதனையாளர்

### அமெரிக்காவுக்கு பயணம்

சௌக்கியப் பகுதியில், சௌக்கிய போதனையாளராகக் கடமையாற்றும் திரு. சு. பாலசுப்பிரமணியம் கடந்த 9-ந் தேதி அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

ஐக்கிய தேச உதவிப் பரிமாற்றுத் திட்டத் தாபனத்தின் மூலம் அமெரிக்க அரசாங்கம் திரு. பாலசுப்ரமணியத்துக்கு அளித்த இலவசக் கல்வியின் பயனை அவர் 14 மாதங்களுக்கு “யேல்” சர்வகலாசாலையில் சௌக்கியக் கல்வி போதனா முறைகளைப் பயின்று பின்பு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இத்தாலி, எகிப்து, அராபியா, இந்தியா எனும் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பாலசுப்பிரமணியம் ஏற்கனவே சௌக்கியக் கல்வி சம்பந்தமான விசேஷ பயிற்சி பெற்றுள்ளார்.

திரு. பாலசுப்பிரமணியம் சில காலமாக சௌக்கியக் கல்வி உபகரண உற்பத்தி நிலையத்துப் பொறுப்பு உத்தியோகத்தராக இருந்ததுடன் சௌக்கியம் சம்பந்தமான கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டிருக்கிறார்.

இவர் தெல்லிப்பழையைச் சார்ந்த பன்னாலையை சொந்த ஊராகக் கொண்டவராவர். பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை, தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றிருக்கிறார்.


## அன்பர்களே!

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

### ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

### ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்
மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

### ‘மோடர்ன் கிளினிக்’
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இரண்டாவது உலகப் போருக்கு முந்திய காலத்தில் இலங்கையில் சீனர் புடவை வணிகம் செய்த காட்சியின்னும் என் மனத்திரையை விட்டகலவில்லை. "சீ லெப்...புடவை..." எனக் கூறிக்கொண்டு தெருக்களில் அவர்கள் அங்காடி வாணிபம் செய்ததை எந்த பாட்டிதான் மறந்துவிடுவாள்? பட்டுப் புடவைகளுக்குப் புகழ் பெற்றது சீனு.

பதினெரு பேரைக் கொண்ட எமது குழுவிலே எழுவர் மெல்லியலார்; அவைகளிலும் அறுவர் திருமணமாகாதவர்கள் 'பட்டுப் புடவைத் தொழிற்சாலையொன்றைப் பார்க்கவேண்டுமென இவர்களுக்கு ஒரே ஆசை. ஆசைக்கு—அதுவும் பெண்களின் ஆசைக்கு—ஓர் அளவுண்டோ! எண்ணிக்கைப் பெரும்பான்மையைக் கொண்டு எதையும் செய்யலாம் என்ற எண்ணமுடைய நாட்டினராதலின், பெரும்பான்மையினரின் விருப்பத்தை நிறைவேற்றக் கன்செளவிலுள்ள மாபெரும் பட்டுப் புடவைத் தொழிற்சாலை ஒன்றிற்குச் சென்றேம்.

## துணிகளில் சித்திரம்

இங்கு பல பிரிவுகள் உள்ளன. துணிகளிலே சித்திரங்களை இழைத்துவிடும் பகுதியே எம்மை அதிக வியப்பிலாழ்த்தியது. போட்டோப் படங்களை முதலில் அளவுக்குத் தக்கபடி பெரிதாக வரைகிருர்கள். ஓவிய நிபுணர்களே இவ்வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். புள்ளிகள்மூலம் உருவரைப் படம் அமைக்கப்படுகின்றது. பின்னர் இதை வைத்துக்கொண்டு இயந்திரங்கள் மூலம் பட்டுத் துணிகளிலே நெய்கிருர்கள். ஐந்து நிறங்கள் சித்திரங்களிற் பயன்படுத்தப்படுகின்றன.

இங்குள்ள தொழிற் சங்க உறுப்பினருடன் உரையாடி, தொழிற்சாலை பொதுவுடமை ஆட்சிக்குப் பின் எவ்வித மாறுதல்களை அடைந்துள்ளது என்பதை அறிந்தோம். கைத்தறிக்குப் பதில் இயந்திரத் தறிகளே இப்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. இங்கு வேலை செய்யும் பெண்களின் குழந்தைகளைப் பராமரிக்கச் சில செவிலித் தாய்மார் உள்ளனர். ஆகவே பெண்கள் தம் குழந்தைகளைப் பற்றியகவலையின்றி வேலை செய்ய முடிகிறது.


## கிறித்தவ வாலிபர் சங்கம்

"மதம் மக்களுக்கு அபினி போன்றது" என்பது பொதுவுடமையாளரின் எண்ணம். வெளிநாட்டாரோடு "அபினிப்போர்" நடத்திப் பின்னர் நாட்டை விட்டே அபினியைத் துரத்திய சீனர், மதமென்ற அபினியையும் நாட்டை விட்டுத் துரத்தி விட்டனரே என்று எண்ணி ஏங்கிய எமக்கு, கிறித்தவ வாலிபர் சங்கங்களும் இயங்கின்றன என்றதும் அதிலொன்றை நேரிலே பார்த்தறிய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

கன்செள கிறித்தவர் வாலிபர் சங்கத்திற்குச் சென்றேம். நாம் சென்ற நேரம் மாலை நேரம். வாலிபர் பல விதமான ஈடுபாடுகளில் கலந்து கொண்டிருந்தனர். ஒரு புறத்தில் குத்துச் சண்டை பழகிக் கொண்டிருந்தனர். இன்னேர் புறத்தில் மேசைப் பந்தாட்டம் (டேபிள் டென்னிஸ்) ஆடிக்கொண்டிருந்தனர். இன்னேர் புறத்தில் உடற் பயிற்சி பயின்று கொண்டிருந்தனர். இன்னும் எத்தனையோ பல முயற்சிகளில் வாலிபர் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர் கிறித்தவ வாலிபர் சங்கத்தின் முகவரியைத் தவற விட்டு, உடற்பயிற்சிக் கழக மொன்றிற்குட் புகுந்துவிட்டோமோ என்ற ஐயப்பாடு தோன்றியது, வாயிலை திரும்பிப் பார்த்தேன், சங்கத்தின் முக்கோணச் சின்னம் நன்கு தெரிந்தது.

## சங்கத்தில் கிறித்தவர் அல்லாதார்

புரட்சிக்குப் பின் சங்கம் புதிய நோக்கங்களோடு இயங்குகின்றதாம். பொதுவுடமைக் கட்சி வாலிபர் மறைவாக உள் நுழைந்து


ஷாங்கை நகரின் ஓர் அழகிய தோற்றம்

பரவியதால் [Infiltrated] சங்கத்தில் இப்போது 80 சதவீதமான உறுப்பினர் கிறித்தவ மதத்தைச் சேராதவர்கள். கிறித்தவ வாலிபர் சங்கம் நகரின் சமூகப் பொதுக் கழகமாகத் திகழ்ந்து வாலிபரின் வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது.

## தொழுகை மண்டபத்துள் இசைப் பயிற்சி

இங்குள்ள நூல் நிலையத்தில் விவிலியம் (Bible) முதலிய கிறித்தவ மத நூல்கள் இருக்கின்றன ஐரோப்பியப் பாதிரிகள் சீனவிற்கு வந்து விவிலியத்தை மொழி பெயர்த்துச் சீன மொழியையே சீர்திருத்தினர்கள். அம் மொழி பெயர்ப்புக்கள் பலவற்றைப் பக்திசிரத்தையோடு எடுத்துக் காட்டினர்கள். தொழுகை மண்டபத்தினுள் இசைப் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. மேலை நாட்டிசைப் பாடல்கள் சிலவற்றை அவற்றின் இனிமை குறையாது பாடிக் காட்டினர்கள்.

## கிறித்தவப் பெண்கள் சங்கம்

கிறித்தவப் பெண்கள் சங்கத்திற்குச் சென்றேம். அங்கும் பெண்கள் சுறு சுறுப்பாகப் பல தொழில்களில் ஈடுபட்டிருப்பதைக் கண்டோம். வேலையற்ற வேளைகளில் எங்களூர்ப் பெண்கள் வேலிக் கரைகளிலோ அல்லது ஏரிக் கரைகளிலோ நின்று வெட்டிப் பேச்சுகளிலீடுபடுவது வழக்கம்; மாநாடுகள் நடத்துவது வழக்கம். இத்தகைய குசுகுசு மாநாடுகளில்தான் ஊரையே இரண்டு படுத்தும் தீர்மானங்களை ஒரு மனதாக நிறைவேற்றுவார்கள். ஆனல் சீனத்துப் பெண்களோ ஓய்வு நேரத்தை நல்ல முறையிற் பயன் படுத்துகிறர்கள். கிறித்தவப் பெண்கள் சங்கத்திலே தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றைப் பயின்று பயன் பெறுகிறர்கள்.

## வானத்திலே சொர்க்கம்

"வானத்திலே சொர்க்கம்; மண்ணிலே கன்செள, சூசெள" எனச் சீனருடைய பழமொழியொன்றேயிருக்கின்றது. தாங் மன்னர் பரம்பரை (Tang Dynasty) தொடக்கம், அதாவது கி. பி. 618-ம் ஆண்டு தொடக்கம், அழகு நகரமாகத் திகழ்ந்து வந்துள்ளது கன்செள. இங்குள்ள பொய்கைகளும் பூஞ்சோலைகளும் இயற்கையின் படைப்பாயினும், மனித சக்தியினல் அழகுக்கு அழகு செய்து பூலோக சொர்க்கமாக்கியிருக்கிறர்கள். இத்தகைய எழில் மிக்க நகரத்தை விட்டுப் பிரிய மனமில்லாமற் பிரிந்தோம்.

## தொழிற் பெருநகரம் ஷாங்கை

உலகப் பெரு நகரங்களில் நாலாவது இடத்தைப் பெற்றது ஷாங்கை; பெரிய தொழில் நகரம். இலண்டன், நியூயார்க், டோக்கியோ முதலிய பெரிய நகரங்களுக்கு அடுத்த பெரிய நகரமாக இது விளங்குகின்றது. இரயிலை விட்டிறங்கியதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர், பண்பாட்டுக் கழகப் பிரதிநிதிகள். இரயில் நிலைய வாசலிலேயே சீனப் பண்பாட்டை விளக்கும் வேலைப் பாடமைந்த தூண் வாயிலொன்று வந்திறங்குவோரின் கருத்தைக் கவருகின்றது.

## ஷாங்கையின் மாபெரும் அரங்கு

பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒரேயிடத்திருந்து கூட்டங்களிற் பங்குபற்றவும், நடன, நாடக நிகழ்ச்சிகளைக் காணவும் வசதியான மாபெரும் அரங்கமொன்றைப் பார்வையிட்டோம். விசாலமான மேடை. அதிலே பலவிதமான மின் விளக்குகள் மறைவான இடங்களிற் பொருத்தப்பட்டுள்ளன. நடிகர்கள் தங்கவும், காட்சிப் பொருட்களை வைக்கவும் வசதியான அறைகள் மேடையின் இரு மருங்கும் உள்ளன. மாடியறைகளிலே ஒப்பனைக்கு வேண்டிய சாதனங்கள் உள்ளன. ஏராளமானவர்கள் ஒவ்வொரு காட்சிக்கும் அனுமதிக்கப்படுவதால் உள் நுழைவுக் கட்டணங்கள் மிகக் குறைவு.

ஷாங்கையின் தெருக்கள் மிகச் சுத்தமானவை. மக்கட் தொகை இங்கு சுமார் அறுபது லட்சம், எனினும் தெருக்களிலே அவர்கள் மிகக் கட்டுப்பாட்டுடன் நடப்பதால்—சில ஒழுங்கு முறைகளைக் கைக்கொள்ளுவதால்—தெருக்கள் அசுத்தமாவதில்லை. வண்டி இழுக்கும் மிருகங்களோ அல்லது வேறு மிருகங்களோ தெருக்களில் நடமாடி மனிதருக்கு இடர்விளைத்தலையோ, தெருக்களை அசுத்தம் செய்வதையோ யாரும் காண முடியாது.

## குடைக் கீழ் கடை

ஷாங்கையின் ஒரு பகுதியிலே பயணம் செய்தபோது தூரத்திலே பெரிய குடைகள் விரித்து நிறுத்தப்பட்டிருந்தன. முற்காலத்தில் மன்னன் ஒருவனுக்குத்தான் மாபெரும் மணிக்குடையிருந்தது. அறம் பிழைத்து விட்டாலோ அன்றிப் போரிலே படை தோற்றுவிட்டாலோ இக் குடை சரிந்துவிடும். இன்று எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்பதை மக்களுக்கு அறிவுறுத்தத் தான் பெரிய பெரிய குடைகள் பலவற்றை நிறுவியுள்ளனர் என்ற எண்ணம் எழுந்தது.

பொதுவுடமை நாட்டிலா மக்களுக்கு உரிமைகள், மன்னரென்ற பெருமைகள் என்று என் சிந்தையிலே சிறு வெளிச்சம் பளிச்சிடாமலில்லை. குடைகளுக்குக் கிட்ட நெருங்கியபோது தான் உண்மை தெரிந்தது. குடைபோலக் கூடாரம் அமைத்து அதன்கீழ் அங்காடி வியாபாரம் செய்கின்றனர் சீனர். காசியிலே, கங்கைக் கரையிலே, இதே போலக் குடைக்கீழ் கடை கண்ட நினைவு பின்னர்தான் வந்தது.

## சிறுர் அரங்கு

இன்றைய சிறுரே நாளைய குடி மக்கள். எனவே சிறுவர் உள்ளத்தைக் கவருவதில் செஞ்சீனர் அதிக அக்கறை கொள்வதில் வியப்பில்லை. "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து". ஆகவே சிறுவர் கல்வியோடு, கலையோடு தமது கருத்தையும் கலந்து விடுகிறர்கள். ஐந்தில் வளைக்கிறர்கள், ஐம்பதிலும் வளைக்கிறர்கள்; வளையாததை முறித்து விடுகிறர்கள்.

சிறுர் கலை நிகழ்ச்சிகளுக்கெனத் தனியாக ஓர் நாடக அரங்கமொன்று நிறுவியுள்ளனர் ஷாங்கையில். சிறுவர்களே இங்கு அனுமதிக்கப்படுவர். சிறு குழந்தைகளோடு வரும் பெற்றேர்களையும் ஓரளவிற்கு அனுமதிக்கின்றனர். நாடகங்களைத் தவிர, சிறுவர்க்காகத் தயாரிக்கப்பட்ட சினிமாவும் காட்டப்படுகின்றது.

## நாடகம் நடந்தது

இங்கு நடைபெற்ற நாடகமொன்றைக் காண அனுமதி பெற்று உட் சென்றேம். குழந்தைகளோடு குழந்தைகளாக நாமும் கலந்திருந்தோம். சிறுவர் இலக்கியத்தில் புகழ்பெற்ற கான் கிறித்தியன் அன்டேர்சன் (Han Christian Anderson) என்ற மேலை நாட்டறிஞரின் தேவ

(10-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் ரேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு
நாஷனல் ரேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.



ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். [illegible] மொகமெட் ஹாஜீயார்,
[illegible] வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 செப்டம்பர் மாதம் 13-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## சுதந்திரனும் நல்லூரனும்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா, தேர், தீர்த்தம் எல்லாம் மங்களகரமாக முடிந்துவிட்டன. இந்த வைபவங்களில் கலந்துகொண்டு திரும்பியயாரைக் கேட்டாலும் இம்முறை உற்சவங்கள் யாவும் அபாரம், அலங்காரம், அற்புதம், பிரமாதம் என்றே கூறுகிறார்கள்.

அங்கு திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தைப்பற்றியும், பக்த கோடிகளைப்பற்றியும் ஆச்சரியத்தோடு குறிப்பிடாதார் இல்லை. இம்முறையைப்போல் முன்பு ஒரு காலத்திலும் கூட்டம் கூடியதுமில்லை, விழாக்கள் கோலாகலமாக நடைபெற்றதுமில்லை என்று எல்லோரும் ஒருமுகமாகப் பன்னிப் பன்னி அபிப்பிராயம் பகர்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கேட்க நமக்குப் பெருமையாக இருந்தது. சுதந்திரனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியேற்பட்டது. வெல்க நல்லூரான் திருநாமம் என்று ஏற்றவும் எழுதவும் ஆசை பிறந்தது!

இப்படியாகச் சுதந்திரன் பெருமைப்படவும் மகிழ்ச்சியடையவும் காரணம் என்ன?

சுதந்திரன் வெளியிடும் முற்போக்கான, துணிகரமான கருத்துக்களையும், எண்ணங்களையும் அரசியல் தத்துவங்களையும் எதிர்த்து ஒரு சிலர் கூட்டம் போடுவது போலவும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவது போலவும் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூர் ஆலயத்தையும் நல்லூரானையும் எதிர்த்தும் இழிவுபடுத்தியும் குசுகுசுக் கூட்டங்கள் நடத்தினர் சிலர், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டனர் மற்றும் சிலர்.

அறிவுத் திருவாளர்கள் வி. குமாரசுவாமி, பி. ஸ்ரீஸ்கந்தராஜாபோன்ற பெரியார்களின் தலையீட்டினாலும், தமிழரசுக் கட்சியின் செல்வாக்கினாலும், சுதந்திரனுடைய பிரசார பலத்தினாலும் சுமார் இரண்டு ஆண்டுகளுகு முன்பு யாழ்ப்பாணத்தில பல ஆலயங்கள் சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுகின்ற ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டன. அப்படித் திறந்துவிடப்பட்ட ஆலயங்களுள் மிகப் பெரியதும் முக்கியமானதும் நல்லூர் கந்தசுவாமி கோவிலாகும்.

நம் அருமைச் சகோதரர்களான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயங்கள் திறந்துவிடப்பட்டதும், தம்மை உயர்ந்த சாதியினர் என்று மமதை கொண்டிருந்த சில வைதிகக் குடுக்கைகள் கொதித்தெழும்பின; ஆர்ப்பாட்டம்பண்ணின; துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டன.

"ஐயகோ, சைவம் அழிந்துவிட்டது. சாத்திரம் கெட்டுவிட்டது. ஆலயம் ஆசூசம் அடைந்துவிட்டது. மந்திரம் மாசுபடிந்துவிட்டது. பழைமை பாழ்விழுந்துவிட்டது. வைதிகம் வாழ்விழந்துவிட்டது. நல்லூர் ஆலயத்திலிருந்து கந்தன் குடி எழும்பிவிட்டான். ஹரிஜனர்கள் ஒருவாயிலால் உள்ளே புக, முருகன் மறு வாயிலால் வெளியேறிவிட்டான். அங்கு கடவுளும் இல்லை. பூதமும் இல்லை. பக்தர்களே, இனி அங்கு போகாதீர்கள். சைவர்களே, நீங்கள் அனைவரும் நல்லூர் ஆலயத்தைப் பகிஷ்கரியுங்கள். உங்கள் பெண்கள், உங்கள் வீட்டில் புக முடியாதவர்களோடு, கோவிலில் போய் முட்டிக்கொண்டு நிற்பதா? அக்கிரமம்! அக்கிரமம்! இந்த அநியாயத்தைத் தெய்வம் பொறுக்காது. பாருங்கள் இன்னும் இரண்டே ஆண்டில் நல்லூர் நாடுவாரற்று, நத்துவாரற்று, வேதாளம் சேர்ந்து, வெள்ளெருக்குப் பூத்து, பாதாள மூலி படர்ந்து, மூதேவி குடிபுகுந்து. பாம்புறையும் பாழ்பதியாகிவிடும்!" இப்படியெல்லாம் சாபமிட்டார்கள். ஆத்திரத்தோடு அறிக்கைகள் வெளியிட்டார்கள்.

ஆனால் நடந்தது என்ன? இரண்டாண்டுகள் கழிந்துவிட்டன; இன்று நடைபெறுவது என்ன? எல்லா மக்களும் உயர்வு தாழ்வு அற்றவர்களாக, சாதி பேதத்தை மறந்தவர்களாக, முருகன் சந்நிதானத்தில் அருகருகே நின்று உளமுருக, உயிர் உருக, மனமுருகத் திருமுருக வழிபாடு நடத்துகின்றனர். தீண்டாமை என்ற சாபத்திடு நல்லூரான் திருப்பதியில் புதைக்கப்பட்டுவிட்ட அற்புதத்தை நாம் இன்று காண்கின்றோம். "இம்முறையைப்போல் முன்பு ஒருகாலத்திலும் கூட்டம் கூடியதுமில்லை விழாக்கள் கோலாகலமாக நடைபெற்றதுமில்லை" என்ற இனிமையான கருத்தைக் கேட்கின்றோம்.

தீண்டாமை ஒழிய வேண்டும், மக்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற கொள்கை வளர வேண்டும், ஆலயங்கள் அனைத்தும் அனைவர்க்கும் திறந்துவிடப்பட வேண்டும் என்று தோன்றிய நாள்தொட்டுத் தொடர்ந்து பிரசாரம் செய்துவரும் சுதந்திரன் மேற்படி இனிய செய்தியைக் கேட்டால் பெருமைப்படாமலும் மகிழ்ச்சியடையாமலும் இருக்க முடியுமா?

ஆலயங்கள் திறந்துவிடப்பட்டதும் அதைத் தொடர்ந்து சுதந்திரன் இரண்டு வருடங்களுக்கு முன்பு தீட்டிய ஒரு கருத்துரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

"பகுத்தறிவுக்கொவ்வாத மூடப் பழக்கவழக்கங்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், கருத்துக்களையும், கற்பனைகளையும் ஒழித்துக்கட்டிப் புரட்சிகரமான சீர்திருத்தங்களைப் புகுத்தும்போது பழைமைப் பற்றுக்கொண்டவர்களிடமிருந்து எதிர்ப்பும் வெறுப்பும் சிறிதளவாவது கிளம்பத்தான் செய்யும். ஆயினும், நாம் செய்யும் காரியம் சரியானது, யதார்த்தமானது என்ற நம்பிக்கையும் உறுதிப்பாடும் நமக்கிருக்குமானல் வெறும் சலசலப்பான இந்த எதிர்ப்புக்களையும், வெறுப்புக்களையும் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை; கலங்க வேண்டியதில்லை. சத்தியம் சிறிதுகாலம் மங்கியிருக்கலாம், மறைந்திருக்கலாம். ஆனால் அழிந்துபட முடியாது. அதுபோலவே, அசத்தியம் சிறிதுகாலம் ஆட்சிபுரியலாம், ஆட்டிப்படைக்கலாம்; ஆனால் நிரந்தரமாக உயிர் வாழ முடியாது. தீண்டாமை என்பது ஆதாரமற்ற ஒரு அசத்தியமாகும். அது தீரத் தொலைந்திட நாளாகிவிட்டது. இன்று கோவில்களின் மரக் கதவுகள் திறந்துவிட்டன. வெகுவிரைவில் மக்களுடைய மனக் கதவுகளும் திறந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை"

சுதந்திரன் கூற்று இரண்டே ஆண்டுகளுக்குள் நிறைவேறிவிட்டது.

செய்ய வேண்டிய சரியான காரியத்தைச் செய்வதா விடுவதா என்று தயங்கிக்கொண்டிருப்பதைவிட, எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல் துணிந்து செய்து முடிப்பதே மேல். ஆரம்பத்தில் எதிர்ப்பவர்களும் இறுதியில் வழிக்கு வருவார்கள் [illegible] உடைய திருக்கதவுகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டதும், அதனால் இன்று ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியும், சமரசமனப்பான்மையும் தக்க சான்றுகளாகும்.

பட்டிருப்பார் விருந்து:

# மாலையும் வரவேற்பும்

## மானம் உள்ளவருக்கு அல்லவோ!

## பெரியகல்லாற்று மக்கள் கண்டனம்

[ எழுதியவர்: "இராமபாணம்" சுதந்திரன் விசேஷ நிருபர் ]

இன்று அரை மந்திரிப் பதவி வகிக்கும் எட்டப்பன் எதிர்மான சிங்க(ள)ம் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமர் பண்டாரநாயகாவினல் எட்டி உதைக்கப்பட்ட வெட்கக் கேட்டினை நினைவுபடுத்தும் ஒரு துண்டுப் பிரசுரத்தில் கண்ட விஷயங்களை கடந்த வாரம் நேயர்களுக்குத் தந்தோம்.

எட்டப்பனுக்கு எந்தப் பக்கம் நோக்கினுலும்எதிர்ப்புத்தான். அவருடைய சொந்தத் தொகுதியைச் சேர்ந்த பெரிய கல்லாற்றுப் பொது மக்கள் வழங்கும் 'வாழ்த்துரை' இதோ:-

உமக்கு எங்களிலுள்ள கோபத்துக்காகவா பட்டிருப்புத் தொகுதித் தமிழ் மக்கள் அனைவரையும் ஏனைய இலங்கைவாழ் தமிழ் மக்களையும் அழித்து ஒழிக்கத் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றும் ஏகபோக சிங்கள அரசாங்கத்துக்குப் பணயம் வைக்கின்றீர்? ஆனல் உம்மைப்போல் அநேக அசுரர்கள் தோன்றி, அக்கிரமங்கள் புரிந்து, அழிந்தொழிந்து போன அநேகவரலாறுகளைப் புராண சரித்திரங்கள் மூலம் கேட்டறிந்துள்ளோம். ஆனல் தமிழ்ப் புராண சரித்திரங்கள் என்றால் என்னவென்பது ஐயாவுக்குப் புரியுமோ அறிகிலோம்!

ஏய்த்துப் பதவியேற்றிருக்கும் எதிர்மன்ன (அ) சிங்க(ள)மே!

நீர் வெற்றிபெற்ற கடந்த தேர்தற் பிரசாரங்களில் நீரும் உமது பந்தக்கரரரும் பேசிமுடித்த இறுதி நேரத்தில், ஆலய வீதிகள் தோறும் ஆழ்ந்த பக்திமானுகக் காட்சியளித்து, கல்லாற்றுப் பிள்ளையார் ஆணை, களுதாவளைப் பிள்ளையார் ஆணை, மண்டூர் கந்தசுவாமி ஆணை, கோட்டைக் கல்லாற்றுக் கண்ணகை அம்மன் ஆணை, தமிழரசுக் கட்சியார்தாஞ தமிழர், அவர்கள் மாத்திரம்தாஞ தமிழுக்குப் பாடுபடுபவர்கள், நான் என்ன சிங்களவஞ, தமிழ்ப் பாஷைக்குச் சம அந்தஸ்துக் கொடுக்க விரும்பாத எந்த அரசியல் கட்சியிலும் நான் அங்கம் வகிக்கமாட்டேன், அன்றேல் எனது பதவியைத் துறந்து சந்நியாசியாகி விடுவேன் என்று செய்த சத்தியங்களை இவ்வளவு கெதியில் மறந்துவிட்டீர்களே! ஆனல் நாங்கள் இவைகளை மறக்கமாட்டோம்.

நாம் மானமிழந்து, தானமிழந்து, தமர் இழந்து, தனமிழந்து, தாய் மொழியாம் தமிழ் இழந்து தவிக்கும் இத்தருணத்தில் அல்லவா நீர் தயைதாட்சணியமற்ற,ராட்சத குணம் படைத்த அரசாங்கக் கட்சியில் அரை மந்திரியாகக் காட்சியளிக்கின்றீர்? நீர் தன்மானமுள்ள தமிழ்த் தாயின் வயிற்றில் பிறவி எடுத்திருந்தால் ஏன் உமது பதவியை இராஜினமாச் செய்யத் தயங்குகிறீர்?

கல்லோயாப் பள்ளத்தாக்குக் காடையர் பலர் மட்டக்களப்புத் தமிழ இனத்தை அழித்து ஒழிக்க ஆவேசம் கொண்டு செய்த அட்டூழியங்களையெல்லாம் எதிர்த்து, மட்டக்களப்பில் தமிழனே வாழ்கின்றான், இது தமிழனின் சொந்த இடம் என்ற வீரப் பெருமையை இலங்கை முழுவதிலும் மற்றும் இதர தேசங்களிலும் நிலைநாட்டிய ஏறக்குறைய பதினயிரம் வீரத் தமிழன் வாழும் துறை நீலாவணைக் கிராமத்தில், உமது பெருங் கருணையால் உமக்கு மது தந்து, மானியம் தந்து, உணவு தந்து, உத்தியோகம் பெறக் காத்திருக்கும் ஒரு 36 பேர் எனக்கு மாலை போடப்போகிறார்கள், எனக்கு அங்கு போகப் பயமாகஇருக்கிறது, என்னை அடித்துக் கொன்றுபோடுவார்கள், எனக்கு உயிர்ப் பிச்சை தாருங்கள் ஐயா என்று கேட்டு நீர் பொலீஸ் பட்டாளத்தைக் கூட்டிக்கொண்டு போய்ச் செய்த அட்டூழியத்துக்குக் கனிதரும் காலம் கிட்டிவிட்டது. உமக்குவெட்கமில்லையா?

தண்ணீர் தருகின்றேன் பிரசவ ஆஸ்பத்திரி சட்டைப் பைக்குள் வைத்திருக்கிறேன் தூக்கித்தருகிறேன், என்னைக் கூப்பிட்டு மாலை போடுங்கள் பொலீஸ் பட்டாளத்தைக் கையில் வைத்திருக்கிறேன், தமிழரை அழிக்கத் தயவு செய்யுங்கள் என்று ஊரெல்லாம் இரந்து கெஞ்சித் திரிகிறீர். துறை நீலாவணைக்குத் தண்ணீர் வசதியும், பிரவச ஆஸ்பத்திரியும் உண்டாக்குவேன் அடுத்த பெரிய நீலாவணையில் அவர்கள் விரும்பியதைச் செய்ய பதினையாயிரம் ரூபா எனது கைவசமுண்டு.

அடுத்த பெரிய கல்லாற்றில் அரை நிமிஷத்தில் ஆறு மாடி கொண்ட அரசினர் சிரேஷ்ட பாடசாலையமைப்பேன். அதே நேரத்தில் அநேக ஆசிரியர்களும் பட்டதாரிகள் பலரும் தேவை; இதற்காக மாலையும் வரவேற்பும் எனக்குக் கொடுங்கள். பொலீஸ் வைத்திருக்கிறேன் பயப்பட வேண்டாம் என்றெல்லாம்பொய்ப் பிரசாரம் செய்கின்றீர்; உமக்கு மாலைபோடும் மக்கள் வாழுமிடங்கள் தோறும் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், தபாற்கந்தோர்கள் மற்றும் இதர தேவைகள் அனைத்தும் குதிரை வேகத்தில் கிடைக்கும் என்று தப்பெண்ணம் கொண்டு குரல எழுப்புகிறார்கள் உமது பக்தர்கள்.

பெரியகல்லாற்றுத் தாய்மார்களே! தந்தையர்களே! தம்பிமார்களே!

ஐயாவின் சத்தியத்தை மறந்து விட்டீர்களா? மதி மயங்கி விட்டீர்களா? அவர்களின் தேர்தல் காலங்களில் நமது கிராமத்தில் நடந்த அட்டூழியங்களையெல்லாம் மறந்துவிட்டீர்களா? இல்லை இல்லை நாம் மறக்கவுமில்லை மறக்கமாட்டோம். இந்த மூன்றரை வருடங்களிலும் கல்லாற்றுக்கு இவர் செய்த கருணைகளெவை? நான் கழகம் வேர்மது தந்தேன் நீங்கள் வோட்டுகள் போட்டீர்கள் என்று இவர் சொல்லுகிறாராம், இப்போ எனக்கு மாலைகள் போடுங்கள் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருகின்றேன்; ஒருசிலருக்கு ஒருவித தொழிலுமின்றிச் சீவனம் செய்யக் கள்ள முறைகளைக் கற்றுக் கொடுப்பேன்; அருமகவீன ஆஸ்பத்திரியும் கொடுப்பேனெனச் சொல்லுகிறார் அரை மந்தின்னியார். இந்த ஆஸ்பத்திரியில் தானே என்னவோ ஐயாவுக்கு அருமைப் புத்திரன் பிறப்பது? கடந்த கால வெள்ளத்தினபோதும் கல்லோயாக் கலவரங்களின் போதும் தமிழ்ப் பாஷையை நீக்கிவிட்டு சிங்களப் பாஷையை அவர் அரசாங்கம்ஆட்சி மொழியாக்கிய போதும் ஐயா அவர்கள் தூங்கிவிட்டார்களா?

பெரிய கல்லாற்றுப் பெருமகனே

நீங்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள்; அரசியல் ஞானம் படைத்தவர்கள்; தன்மானமுள்ளவர்கள்; தாயாம் தமிழினமாத்தை உயிரைவிட மேலாக காப்பாற்றுபவர்கள்; எண்ணிக்கையில்லாத் துரோகங்களைத் தமிழ் சமுதாயத்துக்குச் செய்த ஒருவரை வரவேற்று மாலை போடுவது புனிதச் செயலா? தமிழ்ப் பண்பா? சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! இவ்வரவேற்பில் எதுவித பங்கும் பற்றுமல் மனம் ஆற பகிஷ்கரியுங்கள்!

இவ்வாறு கூறும் துண்டுப் பிரசுரம் ஒன்றை பெரிய கல்லாற்றைச் சேர்ந்த பொது மக்கன் சார்பில் கீழ்க்கண்ட இருபத்து மூன்று பேரும் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஈ. என். எதிர்மன்னசிங்கம் ஆயுர்வேத டாக்டர், வ. திருமேனி, வ. மூத்ததம்பி, க. அரசரெத்தினம், வீ. கணபதிப்பிள்ளை, மு. தம்பிராசலிங்கம், பி. கணபதிப்பிள்ளை, க. சாமித்தம்பி, க இளையதம்பி, யோ. அழகையா, செ. இரத்தினசிங்கம், ஈ. சிங்கராஜா, ப. சிவனடியான், சா. சின்னத்தம்பி,வ. பூபாலபிள்ளை, க. துரையப்பா, ப. சின்னையா, வை. வயிரமுத்து.

(9-ம் பக்கம் பார்க்க)

## எம். பி. களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றக் கூட்டங்களுக்கும், வாக்கெடுப்பிற்கும் வராமல் அலட்சியமாக நடக்கிறார்கள் என்றும், இந்த அவலநிலையை ஒரு வித 'வஞ்சம்' கொடுத்துத் தவிர்க்க வே பிரஸ்தாப 'போனஸ்' திட்டம் ஆலோசிக்கப்படுகிறதென்றும் எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்லிமென்டரி மாநாட்டில் தமிழர் சமஷ்டிக் குரல்

## அந்த அரசமைப்பு இருந்திருப்பின் கடந்த வருடக் கலவரத் தொல்லை தோன்றியிருக்க முடியுமா?

### நாடற்றவர் பிரச்னையை அடியோடு ஒழிக்க வேண்டும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கந்தையா முழக்கம்

இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறை இருந்திருப்பின் கடந்த வருட வகுப்புக் கலவரம் தோன்றியிருக்க முடியாது என்றும் தமிழர் பெரும் கஷ்டத்துக்கு உள்ளானது தவிர்க்கப்பட்டிருக்கும் என்றும் வார்சோவில் நடந்த 48-வது சர்வதேசப் பார்லிமென்டரிக் கூட்டத்தில் பேசிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா எடுத்துரைத்தார்.

நாடற்றவர் பிரச்னை எந்த நாட்டிலுமே இருக்கக் கூடாது என்றும் சிறுபான்மை மக்களுக்கு பெரும்பான்மை மக்கள் பூரண உரிமைகள் வழங்கி அவர்களைச் சுதந்திரமாக வாழவைக்க வேண்டும் என்றும் திரு கந்தையா முழங்கினார்.

திரு. கந்தையா சர்வதேசப் பார்லிமென்டரி மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து சென்ற பிரதிநிதிகளுள் ஒருவராவர். அவர் கடந்த இரண்டாந் தேதி மாநாட்டில் பேசினார். சோவியத் யூனியன் பார்லிமென்டரிக் குழுவின் அழைப்பின் பேரில் திரு. கந்தையா கடந்த 5-ந் தேதி மாஸ்கோ சென்றார். பின்னர் பத்தாந்தேதி பெர்லின் சென்றார். இன்னும் பல நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்யவிருக்கிறார். அங்கெல்லாம் உள்ள நிலைமைகளை அவதானித்து அறிந்து கொள்வதோடு இலங்கையிலுள்ள தமிழர் நிலையையும் அவர் ஆங்காங்கே சுசமாகத் தெரிவித்து வருகிறார்.

வார்சோவில் நடந்த சர்வதேசப் பார்லிமென்டரி மாநாட்டில் தமிழர் உண்மை நிலையைத் தைரியமாக வெளியிட்டார் திரு கந்தையா. இதற்காக இந்தியா, மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து சென்றபிரதிநிதிகளின் ஏகோபித்த பாராட்டுலை அவர் பெற்றார்.

திரு கந்தையா பேசியதாவது:-

**எல்லோருக்கும் உரிமை**

"எல்லா நாடுகளிலும், அவற்றிலும் விசேஷமாக சமீபகாலத்தில் சுயாட்சி பெற்ற நாடுகளில்—அவை ஏழை நாடுகளாயிருந்தாலும் சரி, பணக்கார நாடுகளாக இருக்தாலும் சரி, சிறிய நாடுகளாக இருந்தாலும் சரி, பெரிய நாடுகளாக இருந்தாலும் சரி மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மதத்தால், மொழியால், இனத்தால் வேறுபட்ட எல்லா மக்களுக்கும் வழங்க வேண்டும். சர்வதேச பார்லிமென்டரி யூனியன் அதற்கு வழி செய்ய வேண்டும்.

**வகுப்பு கலவரம் ஏன் வந்தது?**

"இலங்கைப் பாராளுமன்றம் தமிழைத் தள்ளிவிட்டு சிங்களத்தை இலங்கையின் ஆட்சி மொழியாக்கியது. இது வகுப்பு உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. விளைவு என்ன? வகுப்புக் கலவரமே தோன்றியது. பெரிய குழப்பங்கள் நடந்தன. சிறுபான்மை மக்கள் வெகு தொல்லைகளுக்கு ஆளானார்கள். சிறுபான்மை மக்களின் மொழி உரிமையை மறுத்த பாராளுமன்றம் தனி மனிதனுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்பையும் கொடுக்கத் தவறிவிட்டது. சமஷ்டி அரசமைப்பு இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா? அரசியல் சட்டத்தில் மனித உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்குமாயின் இந்நிலை வந்திருக்குமா?

**சமஷ்டி அரசமைப்பு**

"பல மொழிகள் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் அந்தந்த மொழி பேசும் மக்களின் உரிமைகளையும் சுயமரியாதையையும் பாதுகாக்க சமஷ்டி அரசமைப்பே சிறந்தது என்று கண்டு அப்படியே அந்த அரசமைப்பை நடைமுறையில் கொண்டிருக்கிறார்கள்.

**நாடற்றவர் பிரச்னை**

"நாடற்றவர் பிரச்னையும் பல்கிப் பெருகிவருகிறது. எந்த ஒரு மனிதனும் எந்த ஒரு நாட்டையாவது சார்ந்தவனாகவே இருக்க வேண்டும். ஆக, சில மக்கள் நாடற்றவர்கள் என்று வர்ணிக்கப் படுகிறார்கள் என்றால் அவர்களுக்கு மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் பொருள்படும். இது ஒழிய வேண்டும். நாடற்றவர் பிரச்னைக்கு எல்லா நாடுகளுமே முடிவு கட்டிவிட வேண்டும்"-இவ்வாறு திரு வி. ஏ. கந்தையா பேசினார்.

## புதினக் காட்சிசாலை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுத் தபாலில் திருப்பி அனுப்பியதோடு கீழ்க்கண்டவாறு ஒரு இணைப்புக் கடிதத்தையும் தமிழில் எழுதி அனுப்பியுள்ளார்:-

**கடிதம்**

"தாங்கள் எமக்குப் புரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள எப். 1174ம், இலக்கத்தையுடையதும் 31-8-59ம் தேதி கொண்டுள்ளதுமான கடிதமொன்றை அனுப்பியுள்ளீர்கள். அதில் ஏ வ கி. ச. அக்கிராசனரின் கவனத்துக்கும் வேண்டிய நடவடிக்கைக்கும் என்று ஆங்கிலத்தில் குறிப்புக் கொடுத்துள்ளீர்கள்.

**எங்கள் மொழி தமிழ்**

"கிழக்கு வடக்கு மாகாணங்கள் தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாழும் பிரதேசங்கள். இங்கு அவர்களின் தாய் மொழியான தமிழ்மொழிதான் அவர்களின் மொழி. அத்துடன் ஆங்கிலமும் இரண்டாவது மொழியாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. நியாயமான அளவு உபயோக மசோதாகூட தமிழ் மொழியை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அலுவலக மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**அவமானம்**

"இது இப்படியிருக்க தமிழருக்கு வேண்டப்படாததும், விளங்கிக்கொள்ள இயலாததுமான சிங்கள மொழியில் கடிதமொன்றை எழுதி வீணை சிரமத்தைக்கொடுத்ததுமின்றி தமிழ் இனத்தையே அவமானப்படுத்தியும் விட்டீர்கள்.

**புதினக் காட்சிச்சாலை இல்லையே!**

"எங்களைத் தேடி வந்து அவமானத்தை ஏற்படுத்தி வைத்த தங்களது சிங்களக் கடிதம் பதிவுத் தபாலில் தங்களுக்கே திருப்பி அனுப்பப் பட்டுள்ளது. எங்களது காரியாலயத்தில் புதினக்காட்சிச் சாலை ஒன்று இருந்திருப்பின் அதைத் திருப்பி அனுப்பி வைக்கும் சிரமம் எங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கமாட்டாது. அதுபற்றி வருத்தமே.

"தங்களால் அனுப்பப்பட்டிருந்த இக்கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களில் ஒரு வசனம்கூட எம்மால் புரிந்துகொள்ள முடியாமலிருப்பதால் இதில் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தையும் உத்தியோகரீதியாக நாம் பொறுப்பேற்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தனிச் சிங்களக் கடிதங்கள் எதுவும் எங்களது காரியாலயத்தில் வந்து குவிவதை நாம் விரும்பவில்லை. ஏற்றுக்கொள்ளவும் தயாராகவில்லை. எமக்குப் புரியக்கூடிய தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் வரும் கடிதங்களே எமது கவனத்தில் முக்கிய இடம் பெறும்.

**இனி அனுப்ப வேண்டாம்**

"எனவே தாங்கள் அனுப்பிய சிங்களக் கடிதத்தைத் தங்களுக்கே திருப்பிஅனுப்பி வைக்கின்றேன். மீண்டும் இவ்வித சிங்களக் கடிதங்களை அனுப்பி எங்களைச் சித்திரவதை செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்"

தமிழரசுத் தலைவர் திரு கு. வன்னியசிங்கம் பத்திரிகைவாயிலாகப் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே தாம் சிங்களக் கடிதங்களைத் திருப்பி அனுப்பி வருவதாக திரு மாணிக்கவாசகர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

## கடவுளுக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தீபாவளி வேறு வருகிறது. எனக்கு வரவேண்டிய சம்பளம், போனஸ், சந்தோஷம், இனும் இத்தியாதி இத்தியாதி அரைச் சதம் பாக்கி இல்லாமல் அனுப்பிவைக்கத் தவறினால், இங்கு தாதிமார் மூவர் நடந்து கொண்ட மாதிரி நானும் உண்ணு விரதத்தை மேற் கொண்டுவிடுவேன். அப்புறம் உண்ணு விரதம் செய்யும் இடத்துக்கு ஓடோடி வந்து கவனிக்கப்படும் என்று சொல்லி சமாதானம் செய்யப்போவது நீங்களே தவிர, வேறு எந்தக் கடவுளும் அல்ல.

9-9-59.

—நாரதர்.

## மாலையும்.........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வீ. கணபதிப்பிள்ளை, சா. தம்பியப்பா, எஸ். ஞானமுத்து பி. நா., ... பிள்ளை. (தொடரும்)

## பண்டித மணியின் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்களுக்கும் நம் காலத்து சைவப் பெரியார்களுக்கும நம்மவர்கள் அளிக்க முன்வருவதாயில்லை. பாராட்டு எல்லாம் விளம்பரத்தை விரும்பி மேடைகளில கரடியாகக் கத்தும் அரசியல் வாதிகளுக்குத்தான் கிடைக்கிறது. ஒதுங்கியிருந்து சலசலப்பு இல்லாமல் சேவை செய்யும் பெரியார்கள் கவனிப்பாரற்று இருக்கிறார்கள்.

"பண்டிதமணி எமக்கு ஆறுமுக நாவலரை நினைவூட்டிக்கொண்டு இருக்கிறார். மறைந்த நாவலரை நாம் பண்டிதமணியில் காண்கிறோம்."—இவ்வாறு திரு கனகரத்தினம் கூறினார்.

விழாவில் திருவாளர்கள் வி. கைலாசபதி, பி. கிருஷ்ண பிள்ளை, ந. சுப்பையாபிள்ளை, இராசேந்திரம் உட்படப் பலர் பேசினார்கள்.

விழாவுக்குத் தலைமை வகித்த நீதிபதி திரு இ. தம்பித்துரை பண்டித மணியின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

## பெரியார்கள் நினைவு விழா

கொழும்புத் தமிழ்ச் சங்கம் எதிர்வரும் 15-9-59 செவ்வாய்க் கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சேர் பொன். அருணசலம், திரு. வி. க., மறைமலை அடிகள், பாரதி ஆகியோரின் நினைவு விழாக் கொண்டாடவிருக்கிறது. நேரம் மாலை 5 மணி.

வழக்கறிஞர் திரு. வ. அருளம்பலம் தலைமையில் நடக்கும் இவ்விழாவில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் எம். பி, திரு. ஈழவேந்தன், பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி, திரு. செ. இராசதுரை எம். பி. ஜனப் எம். கே. எம். அபூபக்கர் ஆகியோர் பேசுவர் என்று தெரிகிறது.

இந்தப் பாராட்டு விழாவை யொட்டி நினைவு மலர் ஒன்றும் வெளியிடப் பட்டது.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜன்டுகள்:
றெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புறொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது



சி. சி. சி.
தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல. பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாளி நண்பன்

சிறுகதை — எழுதியவர்: இனுவைமாறன்

பக்கத்து வீட்டு ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. பாட்டொலி அவள் காதில் நறுக்கென்று பட்டுக்கொண்டேயிருந்தது. திடீரென்று பாட்டு ஓய்ந்ததும் புரியாத பாரசீகப் பாஷை வந்தது. சாப்பிட்டுக்கொண்டிருந்த சண்முகம் பரபரப்புடன் எழுந்து கையைக் கழுவிக்கொண்டான். நொடிப்பொழுதில் கொடியில் இருந்த 'சேட்' ஒன்றை எடுத்து மாட்டியவாறு,"பார்வதி நேரமாகிறது நான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு வாசல் கதவைத் திறந்தான், வேலைக்குப் போவதற்கு.

"அதற்குள் புறப்பட்டாச்சா" என அடுப்பங்கரையிலிருந்து சத்தம் வந்தது. "இண்ணைக்கு கொஞ்சம் நேரத்தோடே வந்துவிடுங்கோ" என்று சொல்லிக்கொண்டு அவன் பக்கம் விடுவிடுவென்று வந்தாள் பார்வதி. மனைவி அப்படிக் குறுக்கிட்டுப் பேசியது சகுனப்பிழை என்று நினைத்தானே என்னவோ, புறப்பட்டவன் வாசல் படியிலேயே நின்றுகொண்டு "ஏனும்?" என்றான் எதேச்சையாக அவளைப்பார்த்து.

"இன்றைக்காவது மற்றவங்க கேட்பதற்குள், நாங்களே அவங்கவங்கபணத்தை கொடுத்துவிட வேண்டும்."

"என்றைக்கும் அவங்க பணத்தை வைச்சிருக்கவா போறம்? இன்றைக்குப் பாரேன் எலலாருடைய பணத்தையும் விட்டெறிந்துவிடுகிறேன். உனக்கும், பிள்ளைக்கும் கூட புடவையும் துணிமணியும் எல்லாமே வாங்கிக்கொண்டு வருகிறேனு இல்லையா என்று நீயே பாரேன்."

"எனக்கொன்றும் புடவையும் வேண்டாம், சட்டையும் வேண்டாம். இந்தக் கடன் தொல்லையை இல்லாமல் செய்தால் அதுவே போதும். கொஞ்சம் நிம்மதியாகவாவது இருக்கலாம்."

"என்ன கடன் கடன் என்று ஏதோ அளந்து கொட்டுகிறுய்? எத்தனை பேருக்கு நான் கடன் கொடுக்க வேண்டும்? ஏதோ என் கெட்ட காலம். போன மாதம் வேலையில்லாமல் இருந்ததால், அந்த ஐயாத்துரையிடம் ஒரு ஐம்பது ரூபா கடன் வாங்கினேன்.பக்கத்து கடைக்கும் பத்து இருபது ரூபா கொடுக்க வேண்டும்"

"ஓஹோன்னுராம். இவ்வளவுதாஞ? குழந்தைகளுக்குப் பால் வாங்கின பணம் இன்னும் கொடுத்தபாடில்லை; இந்த இரண்டு மாதக் கூப்பன் காசு வேறே இருக்கிறது. இதைவிட போன கிழமை உங்களுக்கு பக்கத்து வீட்டு செல்லத்திடம் பத்து ரூபா கைமாத்து வாங்கித்தந்தேன்" என்று அடுக்கிக்கொண்டே போனவள், "எல்லாத்துக்கும் உங்கள் சம்பளம் போதுமோ என்னவோ?" என்று எக்கத்தின் விளிம்பில் நின்று சொன்னுள்.

அவன் எதுவும் பேசவில்லை. மௌனமாக வேலைக்குப் போனுன். போனவன்—

மாலையில் மணி ஆறுகியும் வரவேயில்லை. அதற்குள் பார்வதியின் உயிரை வாங்காத குறையாக மற்றப்படி அவளைப் பதைபதைக்க வைத்துவிட்டார்கள் கடன்காரர்கள்.

"என்ன பார்வதி, உன் புருஷன் இன்னும் வரவில்லையா? இண்ணைக்கும் வழக்கப்படி ஏமாற்றந்தானே என்னவோ!" என்று ஒருதரத்துக்கு இருதரம் வந்து நச்சரித்துவிட்டுப் போய்விட்டார் ஐயாத்துரை. வாடிக்கைக் கடைக்காரரர் ஆள் அனுப்பியிருந்தார். அடுத்த வீட்டுச் செல்லம் கூட அடிக்கொருதரம் வந்து போனுள். இத்தனையையும் பொறுத்து "அவரை ஏன்இன்னும் காணவில்லை" என்ற கலக்கத்தோடு இமைகளை இடுக்கிக்கொண்டு கதவு நிலையோடு சாய்ந்தவாறு நின்றுள் பார்வதி, அவன்வருகையை எதிர்பார்த்து.

ஆளையாள் தெரியாத அளவுக்கு இருள் படர்ந்துவிட்ட நேரத்தில் அவன் வந்தான். காலையில் போகும்போது அவனிடத்திலிருந்த மிடுக்கை அப்போது காணவில்லை. அலுத்துச் சலித்துப் போய் முகத்தைச் சுளித்துக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டவாறு வந்தவன் மனைவியிடம் எதுவும் பேசாமல் உள்ளே சென்று தனிமையாக உட்கார்ந்துகொண்டான்.

அவன் முகத்தில் பிரதிபலித்த கவலரத்தையும், துயரையும் கண்டு அவன் நிலையை ஒருவாறு ஊகித்துக்கொண்ட பார்வதி அவன் பக்கம் செல்லாது, நேராகக் குசினிக்குச் சென்று கொஞ்சம் தேநீர் கொண்டுவந்து "இந்தாங்க, இதைக் குடியுங்க" என்றுள் வாஞ்சையோடு.

அவன் அவளை நிமிர்ந்து உற்றுப் பார்த்தான். பேசமுடியாமல் உதடுகள் மடமடக்கவே, 'பொட...பொட' வென கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

"இதென்ன சின்னப் பிள்ளை மாதிரி அழுகை! இப்போ என்ன நடந்து விட்டது? இண்ணைக்கு இல்லையென்றுல் நாளைக்கு அவங்க பணத்தைக் கொடுத்து விடுகிறது. இதுக்காக நீங்கள்..."

அவள் வார்த்தைகள் அவனுக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தன. எங்கே, மனைவி எரிந்து விழுவாளோ என்று எண்ணிய அவனுக்கு அவள் வார்த்தைகள் புரியாத புதிராகத்தான் இருந்தன.

சிறிது நேர அமைதிக்குப் பின், "ஏன் இண்ணைக்குச் சம்பளம் இல்லையா?" என்று பேச்சை எடுத்தாள் அவள்.

"சம்பளம் தந்தார்கள். ஆனுல் என்னை ஏமாற்றி விட்டார்கள். இல்லை நான்தான் ஏமாந்து விட்டேன்" என்று சொல்லி ஒரு ஐம்பது ரூபா நோட்டையும், நாலு ஐந்து இரண்டு ரூபா நோட்டுக்களையும் அவளிடம் நீட்டினுன்.

அவற்றைப் பார்த்ததும் பார்வதிக்குப் பகீரென்றது. தலை சுற்றியது. இவற்றைக்கொண்டு எப்படிச் சமாளிப்பது என்று நினைத்தாளோ என்னவோ, முந்தானைச் சேலையால் முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மிப் பொருமி அழுதாள்; அவனும் வீரிட்டு அழுதான். நேரம் போனதே தெரியவில்லை.

அழுகைக்குப் பின் அமைதி நிலவியது. தூங்கிக்கொண்டிருந்த கைக் குழந்தை கண் விழித்து அழுத குரல் அமைதியைக் குலைத்தது. பார்வதி எழுந்து குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு "வாருங்கள் சாப்பிட" என்று கணவனை அழைத்தாள். அவனும் எழுந்து சென்றுன். அப்படியே அன்றைய இரவு கழிந்தது.

மறுநாள் காலை, மணி ஒன்பதாகியும் அவன் வேலைக்குப் போகவில்லை "ஏன் வேலைக்குப் போகவில்லையா?" என்று பார்வதி கேட்டதிற்கு அவன் பதில் பேசாமல் பிடிவாதமாக இருந்தான். அப்போது அடுத்த வீட்டுச் செல்லம் வந்தாள். "நீங்கள் போங்க, கொஞ்ச நேரத்தில் நானே கொண்டுவந்து தருகிறேன்" என்று சொல்லி செல்லத்தை அனுப்பிவிட்டு, கணவன் பக்கம் திரும்பி, "இந்தாருங்க, இதைக் கொஞ்சம் மாற்றிக்கொண்டு வருகிறியளா?" என்று கேட்டு அவனிடம் அவன் கொடுத்த அந்த ஐம்பது ரூபா நோட்டை நீட்டினுள்.

அவன் அதை எடுத்துக்கொண்டு, ஐந்துலாம்புச் சந்தியை நோக்கி நடந்தான். ஒரு கடைக்குள் நுழைந்து, "இதைச் சில்லறையாக்கித் தருகிறீர்களா" என்றுகடைக்காரனிடம் அந்த நோட்டை நீட்டினுன். கடைக்காரர் இல்லை என்ற வழமையான பல்லவியைப் பாடாமால் சந்தேகப் பார்வையுடன் அந்த நோட்டைத் திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டு, "இதைப் பாருங்காணும்" என்று பக்கத்திலிருந்தவருக்கும் வேலை கொடுத்தார். அவரும் மாறிமாறிப் பார்த்துவிட்டு டெலிபோன் பக்கம் சென்றுர். அந்த நிகழ்ச்சிகள் அவனுக்கு ஆர்ச்சரியமாகத்தான் இருந்தன. ஆயினும், சில்லறை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு கடைசி வரைக்கும் இருக்கத்தான் செய்தது.

கொஞ்ச நேரத்தில் அங்கு பொலீஸ் காரர்கள வந்தார்கள். கடைக்காரரிடம் ஏதோ பேசிவிட்டு அவன் பக்கம் திரும்பினுர்கள்.ஏதோ அவனிடம் சொன்னுர்கள். அவனும் ஒன்றும் புரியாமல் அவர்கள் பின்னுல் சென்றுன்.

பொலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றதும்தான் அவனுக்கு விஷயம் புரிந்தது. ஐம்பது ரூபா கள்ள நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டுள்ளனவாம். அச்சடிப்பவர்களைக் கண்டு பிடிக்கும் வரை, சந்தேகத்துக்கிடமான ஐம்பது ரூபா நோட்டுக்களை வைத்திருப்பவர்களை பொலீஸில் ஒப்படைக்க வேண்டும் என்பது பொலீஸ் பெரிய இடத்து உத்தரவு.

தகவல்கள் விசாரித்துக்கொண்டு அனுப்பி விடலாம் என்று சண்முகத்தை ஒரு அறைக்குள் தள்ளி விட்டார்கள் பொலீஸ்காரர்கள. தலையில் பேரிடி விழுந்தவன் போல் இருந்தான் சண்முகம். 'இந்தத் துர்க்கதி எனக்கா வரவேண்டும்' என்று எண்ணி ஏங்கியவன், 'இங்கு எப்படி நான் வந்தேன்' என்று சிந்திக்கத் தொடங்கியதும் பல பழைய சம்பவங்கள் பறந்தோடி வந்து நின்றன அவனது மனக் கண்முன்.

* * *

"பதினைந்து வயதிலிருந்து நான் பஞமாஸ் கம்பெனியில்தான் வேலை பார்த்தேன். நல்ல சம்பளம் தேதி தவருது கிடைத்து வந்தது. இத்தனை வயது வரைக்கும் அங்குதான் வேலை செய்தேன். ஆனுல்.........

தொற்று வியாதி பரவுவது போல் தொழிற் சங்க வியாதியும் பரவியது பெரிய கம்பனிகளில் வேலை பார்ப்பவர்கள் எல்லோரும் வர்த்தக சிப்பந்திகளின் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளவே, நாங்களும் வேறு வழியில்லாமல் சேர்ந்து கொண்டோம். எங்களுக்கென்றே ஒருகிளை ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டோம்.எமது உரிமைகளைப் போராடி பெற வென்று நாங்கள் தொழிற் சங்கத்தில் சேர்ந்த மறுமாதமே ஒரு பொது வேலை நிறுத்தம் எமக்காக நடத்தப் பெற்றது. 'போனசு' 'அலவன்சு'என்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தோம். வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது. மற்றக் கம்பனிகளில் வேலை பார்ப்போர்களுக்குத் தான் அந்த வெற்றி பயனளித்தது. எங்களைப் பொறுத்த வரையில், ஏற்கனவே முதலாளி தைப்பொங்கலுக் கென்றும் தீபாவளிக்கென்றும் வருடப் பிறப்புக்கென்றும் இனுமாக ஐம்பது அறுபது தருவது வழக்கம்.

ஆனுல்போனஸ்சட்டம் வந்ததும், நாங்கள் எங்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே போனசாகப் பெற்ருேம். அது எங்களைப் பொறுத்த வரையில் நட்டம் தான். அப்படி ஆண்டுகள் சில கழிந்தன. அவ்வப்போது வேலை நிறுத்தம் செய்தோம். அதனுல் எமது உரிமைகளில் சில பாதுகாக்கப்பட்டன, என்பது உண்மைதான். ஆனுல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, இங்குள்ள கம்பனிகள் அனைத்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது, ஏற்கனவே நாலு ஐந்து மாதங்களாக நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த எங்கள் கம்பெனி 'இது தான் தருணம்' என்று மூடு விழா நடத்தியது. வெறுங் கையுடன் வீடு திரும்பினேம்.

அதன் காரணமாக ஒரு மாத காலமாக நான் வேலையில்லாமல் இருந்தேன். தினமும் வேலை தேடுவதே எனது வேலையாகிவிட்டது. கால் வயிற்றுக் கஞ்சிக்கே தடம் புரண்டு கஷ்டப்பட்டு விட்டேன். அப்போதுதான்அந்த ஐயாத்துரையிடம் ஐம்பது ரூபா கடன் வாங்கினேன்.

ஒரு மாதம் கழிந்தது ஒரு நாள், என்னுடன் முன்னர் வேலை பார்த்த என் நண்பன், தொழிற் சங்க செயலாளர் நடராசா, ஒரு புதுக் கம்பனி ஆரம்பித்து நடத்துகிறுன் என்பதை அறிந்ததும், அவனிடம் சென்று அவன் கால் கையைப் பிடித்து அங்கு வேலை தேடிக்கொண்டேன். அங்கு வேலை பார்ப்பவர்களில் நான் மிகவும் திறமையாக வேலை பார்க்கிறேன் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. ஏன், நண்பன் கூட அப்படி அடிக்கடி சொல்வதுண்டு. அந்தமாதம் கழிந்தது. அடுத்த நாள் சம்பளம். அன்று தான் நான் என் மனைவியிடம் பெருமையடித்துவிட்டுப் போனது. அன்றையதினம்வேலை முடிந்தது. மாலை எல்லோருக்கும் சம்பளம் கிடைத்தது. எனக்கும் தான். ஆனுல்......அறுபது ரூபாமட்டுமே கிடைத்தது. மலையைக் கல்லி எலியைப் பிடித்த கதை போலாகிவிட்டது. அப்போதே, நண்பனிடம் சென்று முறையிட்டேன். அவன் அனுசரணையாக எதுவும் சொல்லவில்லை. அவன் உதவியும் இல்லை.

"என்ன நடராசா நீயே இப்படிச் செய்தால்?" என்று நான் சொல்லி முடிப்பதற்குள்அவனுக்குகோபம் மூக்கு நுனிக்கு வந்துவிட்டது.

"பெயர் சொல்லிக் கூப்பிட துணிவு வந்து விட்

(15-ம் பக்கம் பார்க்க)

# மூங்கில் திரைக்குப் பின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கதையொன்றே நாடகமாக்கப்பட்டிருந்தது. மேலை நாட்டுக் கதா பாத்திரங்களுக்கேற்ப ஆடைகளும் ஒப்பனையும் இருந்தன. சீன நடிகருடைய தாழ்ந்த மூக்கெல்லாம் மிதந்து விட்டது ஒப்பனையால்!

கதை நடந்த பிரதான காட்சியிடங்கள் நாலு. இந்த நான்கு காட்சியமைப்புகளைத் திடீர் திடீரென மாற்றி எம்மை வியப்பிலாழ்த்தினர். அன்டேர்சனின் கதைகளிலே அற்புதங்களுக்குக் குறைச்சலில்லை. அத்தனை அற்புதங்களையும் தந்திரக் காட்சிகளால் மேடையில் காட்டினுர்கள்.

கண் இமைக்கவில்லை—
வாய் மூடவில்லை

எனது இடப் பக்கத்திலேயிருந்த குழந்தைகளைப் பார்த்தேன்; வாய் பிளந்து காட்சிகளை இரசித்தார்கள். வலப் பக்கத்திலேயிருந்த குழந்தைகளைப் பார்த்தேன்; அவர்களும் சோராது, ஆசனங்களிற் பின் சாராது, வாய் பிளந்து பார்த்து இரசித்தனர். அக்குழந்தைகளிலொன்றின் முகம் அறிமுகமாக இருந்தது. உற்றுப் பார்த்தேன். அது வேறு யாருமில்லை. எமது குழுவினருள் ஒரு பெண்மணி. அவரே அப்படி அந்த நாடகத்தைத் தேவதை போலக் கண இமைக்காது பார்த்து இரசித்தார் என்றுல் குழந்தை [illegible] இல்லை?

(தொடரும்)

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் திரு. கு. வன்னியசிங்கம்:

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிருவாக அலுவல்கள்

## தமிழில் நடத்த கட்டளை பிறப்பித்தீர்களே

### எந்த அலுவல்கள் அப்படி அங்கு நடைபெறுகின்றன?

## ஆட்சி மொழி சம்பந்தமாகப் பிரதமர் நேரு வெளியிட்ட கருத்து இலங்கைக்கும் பொருந்தும்

**அரசகரும மொழித் திணைக் களகத்தில் திரை மறைவில் நடக்கும் தமிழ் ஒழிப்பு வேலைகளையும் ஊழல்களையும் அம்பலப்படுத்தியதோடு அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டியும் கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அணிமையில் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சின் முதல் இரண்டு பகுதிகள் முந்திய வாரங்களில் வெளியிடப்பட்டன. மூன்றுவது பகுதி இங்கு தரப்படுகிறது.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறித்த சில நிருவாக அலுவல்கள் தமிழில் நடைபெறக்கூடிய ஏற்பாடு அரசகரும மொழி அதிகார சட்டத்தில் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அவிசாவலைப் பிரதிநிதி (திரு டீ. பீ. ஆர். குணவர்த்தன) உணவு விவசாய மந்திரியாக இருந்தகாலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிருவாகம் தமிழில் நடைபெறுவதைத் தாம் அனுமதிக்கப் போவதாகக் கூறினர். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். உங்கள் அதிகாரச் சட்டம் சில நிருவாக அலுவல்களைப்பற்றிக் கூறுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிருவாக அலுவல்கள் எவற்றையாயினும் தமிழில் நடத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளதா?

### தமிழ்ப் பகுதிகளிலுள்ள பொலீஸார்

பொலீசுத் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை என் நண்பர், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி (திரு அமிர்தலிங்கம்) அன்று குறிப்பிட்டார். 99 சத வீதமான தமிழ் உத்தியோகத்தரை இடம் மாற்றி அவர்களுக்குப் பதிலாகத் தமிழிற் கொடுக்கப்படும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய இயலாத சிங்களப் பொலீஸ் உத்தியோகத்தரைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த உத்தியோகத்தருக்குத் தமிழ் தெரியாதது மாத்திரமன்றித் தமிழை உபயோகிக்க விருப்பமுமில்லை இவர்களுக்கு. யாராவது தமிழில் முறைப்பாடு செய்தால் அது ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் பதிவு செய்யப்படுகிறது. தமிழில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய பொலீஸ் உத்தியோகத்தர் ஆங்கில்லை. இதை நான் ஒரு எடுத்துக்காட்டாகவே கூறுகிறேன்.

### தமிழில் நிருவாக அலுவல்கள்

நிலைமை இவ்வாறிருப்பதனல் இம்மாகாணங்களில் இப்பொழுது தமிழில் நடத்தப்படும் அல்லது தமிழில் நடைபெற வேண்டும் என நீங்கள் கட்டளையிட்டுள்ள நிருவாக அலுவல்கள் எவை? அதிகாரச் சட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள இக்கருமத்தை நடைமுறையில் கொண்டு வர ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? இல்லை. ஆனல் கருமங்கள் எதிர்மாருக நடைபெறுகின்றன.

### இந்தியாவும்இலங்கையும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தைப் பலாத்காரமாகப் புகுத்தும் நோக்கத்துடன் சிங்கள அறிவுள்ள எழுத்து வினைஞர்களை அனுப்ப அரசகரும மொழி விசேஷ ஆணையாளர் முயலுவதாக அணிமையிற் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம். இத்தொடர்பில் இந்தியாவில் இப்பொழுது நிருவாக மொழி விஷயமாக என்ன நடைபெறுகிறது என்பதை பார்ப்பது பிரயோசனமளிக்கும். இந்தியப் பிரதமரும் எம் பிரதமரும் பல விஷயங்களில் ஒற்றுமை காண்பதாலும்,இந்தியா குடியாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டெனஎம் பிரதமர் அடிக்கடி எமக்குக் கூறியிருப்பதாலும், இந்திய கூட்டாட்சியில் இந்தி அரசகரும மொழியாக இருக்க வேண்டிய விஷயம்பற்றி இந்திய மேல் சபையில் (லோக் சபா) இம்மாதம் 7ம் தேதி (7-8-59) பண்டிதர் ஜவஹர்லால் நேரு சொல்லியவற்றை இங்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன். பண்டிதர் நேரு பேசியது வருமாறு:

### இந்தி ஆட்சி மொழிபற்றி நேரு

"தென்னகத்திலுள்ள பலர் இந்தி படிப்பதை எதிர்த்தனர். இந்தி தம்மீது வலிந்து புகுத்தப்படுகிறது என்ற ஒரு உணர்ச்சியினுல் எதிர்த்தார்களேயன்றி இந்தி மொழிக்கு தாம் எதிராளிகள் என்பதனுல் அல்ல. ஆகையினுல் வலிந்து புகுத்த வேண்டும் என்று எவரும் பேசவே கூடாது. தென்னட்டினருக்கு இந்தி படிக்க விருப்பமில்லாவிட்டால் அவர்கள் படிக்கவே தேவையில்லை. இத்தகைய மனப்பான்மையை நாம் கைக்கொள்ளுவோமாயின் அவர்களையும் இந்தி பேசும் மக்களையும் படிப்படியாக ஒன்று சேரச் செய்துவிடலாம்.

"இரண்டு விஷயங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு. முதலில் இந்தியை வலிந்து புகுத்தக்கூடாது; இரண்டாவது ஆங்கிலம், ஒரு கூட்டு மொழியாக அல்லது ஒரு மேலதிக மொழியாக, கால வரையறையின்றித் தொடர்ந்திருத்தல் வேண்டும். ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதனுல் சில வசதிகள் உண்டு என்பதற்காக இப்படிச் சொல்லவில்லை. இந்தி மொழிமூலம் அரசாங்கத்துடன் தொடர்பு வைக்காவிடின் தம் முன்னேற்றத்துக்காகிய சில துறைகள் தமக்கு மறுக்கப்பட்டுவிடுமேயென்று இந்தி வழங்காப் பிரதேசங்களிலுள்ளவர்கள் கலக்கமடையாதிருக்கும் பொருட்டே ஆங்கிலம் தொடர்ந்திருக்க வேண்டும் என்கிறேன்.

"அரசாங்கத்துடனுள்ள கடிதப்போக்குவரத்தை அவர்கள் ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளலாம். மக்கள் விரும்பும்வரை ஆங்கிலத்தையும் ஒரு அரசகரும மொழியாக நாம் வைத்துக்கொள்ளலாம். இம்மொழிபற்றிய தீர்மானத்தையெடுக்க இந்தி பேசும் மக்களை அனுமதிக்கமாட்டேன்; இந்தி பேசாத மக்களே இவ் விஷயத்தை தீர்மானித்தல் வேண்டும்"

தலைவர் அவர்களே! இந்தியை அரசகரும மொழியாக ஏற்கும் விஷயத்தை, முக்கியமாக இந்தி பேசாத பிரதேசங்களில், இந்தி பேசாத மக்கள் கையிலேயே இந்தியப் பிரதமர் விட்டுவிட்டார் என்பதை அவதானிக்கலாம். இந்தி பேசப்படாத பிரதேசங்களில் இந்தியை எப்பொழுது ஏற்கலாம் என்பதை அப்பிரதேச மக்களே தீர்மானிப்பர். இந்திய இராச்சியங்கள் எல்லாவற்றிலும் அந்த அந்தப் பிரதேச மொழிகளே நாளாந்த நிருவாக மொழிகளாக இருக்கின்றன என்பதை இத் தொடர்பில் நாம் மறந்துவிடக்கூடாது.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: சமஷ்டி முறை.

(13ம் பக்கம் பார்க்க)

# சுந்தரர் சுபாஸைப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் துறவு தாம் உதவிச் சிருஷ்டித்த சோல்பரி ஒற்றையாட்சி முறையெனும், அரசியல் பந்தத்திலிருந்து நழுவிக் கொள்ள எடுத்த உபாயமாக எண்ணக் கூடியதாக விருக்கிறது. 'தனித் தமிழ் ஈழம்' என்ற ஒரு வழுக்குத் தடியை நீட்டி 'மக்களே! இதை நீங்கள் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். நான் காப்பாற்றிக்கரை சேர்க்கிறேன்' என்று கூறினுல், 'பற்ற முடியவில்லையே' என்ற மக்களைக் குறை கூறிப் புறக்கணித்துவிட்டு, தந்திரமாகப் பொறுப்புக்களிலிருந்து நழுவிக்கொள்வது திரு. சுந்தரலிங்கம் போன்ற நேர்மையும், தைரியமுள்ள ஒரு மதிப்புக்குரியவரின் செய்கையாகாது.

### சுந்தரும் தமிழரசாரும்

தமிழ் இனத்தில் ஒற்றுமை வேண்டுமென்பது உண்மை தான். அதற்காக ஒரு தளபதி ஒதுங்கி இருத்தல் மூலம் பலவீனத்தை ஏற்படுத்தலாமா? 'சமஷ்டி கோருவோம், கிடையாத போது தனியரசாயினும் பெறுவோம்' என்று கூறும் தமிழரசினர் கொள்கைக்கும், சுந்தரர் கொள்கைக்கும் வித்தியாசம் அதிகமாயில்லை. சுந்தரர் ஆயுதப் போராட்டம் என்கிறுர். தமிழரசார் சாத்விகப் போராட்டமென்கிறுர்கள். ஆயினும்இருசாராரும், சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டுமென்பதில் ஒற்றுமையாக உள்ளார்கள்.

### ஒத்துழைப்பு நல்கினுல் என்ன?

திரு. செல்வநாயகத்தைத் தமிழர் தலைவராகத் தாம் ஏற்றுக்கொண்டதாக ஒரு முறை பத்திரிகைகளில் வெளியான செய்தியிலிருந்து திரு செல்வநாயகத்தின் நேர்மையான போக்கை திரு சுந்தரலிங்கம் ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவு. அங்ஙனமாயின் சிறு வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல், ஒற்றுமையின் பொருட்டு, ஏன் தமிழரசுக் கட்சியோடு ஒத்துழைத்து, சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்கக் கூடாது? ஒதுங்கி இருப்பதிலும் பார்க்க இச் செய்கை தமிழ் மக்களுக்குப் பலத்தைக் கொடுக்காதா?

### சுபாஸ் சேவை

இல்லையேல், தமிழரசியக்கத்திலும் பார்க்க ஒரு தீவிர இலட்சியமாகிய சிங்கள ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் வழியில் முன்னேறுமாறு திரு. சுந்தரலிங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம். நேர்மையும், உறுதிப்பாடுங் கொண்ட இயக்கமானுல் மக்கள் ஆதரவு தருவார்கள். நேதாஜிசுபாஸ்சந்திரபோஸ் காங்கிரசோடு வேறுபட்ட காலத்தில்,அத்தகைய காரியத்தையே செய்தார். ஒற்றுமை வேண்டுமென்பதற்காகவோ, அன்றித் தம் தீவிரப் போக்கைப் பெரும்பாலான மக்கள் ஆதரிக்கவில்லை என்பதற்காகவோ, ஒதுங்கிப் பதுங்கி, அரசியல் துறவு பூணவில்லை. மாருக தம்மில் நம்பிக்கை கொண்டவர்களை அணி வகுத்து ஆயுதப் போருக்கே தயாரானுர் அவ்வீரர். தக்க சமயம் பார்த்துப் போருஞ் செய்தார். அவர் செய்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை ஒழிக்க நேரடியாக உதவவில்லையென்றுலும், சுதந்திர இயக்கத்துக்குப் பெரும்பலத்தைக் கொடுத்தது என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். அவரின் தேசப் பற்றும் வீரமும் இந்திய சரித்திர ஏட்டில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவாகும்.

# இடைக் காட்டில் திருக்குறள் மாநாடு

## தமிழறிஞர் கி. ஆ. பெ. கலந்து கொள்கிருர்

யாழ்ப்பாணத்திலுள்ள இடைக்காடு பாரதி கழகம் இம்மாதம் 11, 12, 13 தேதிகளில் இடைக்காட்டில் பிரத்தியேகமாக அமைக்கப் பெற்ற பாரதி அரங்கில் திருக்குறள் மாநாடு நடத்துகிறது. ஒட்டுச் சுவடி ஊர்வலத்தோடு ஆரம்பமாகிறது.

மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. மெ. சுந்தரம், கவிஞர் கண்ணதாசன், ஈழத்து திருவாளர்கள் வி. செல்வநாயகம், வி. பொன்னம்பலம், ஆ. சின்னத்துரை, பண்டிதர் வி. சி. கந்தையா, திருமதி கங்கேஸ்வரி கந்தையா முதலானேர் மாநாட்டில் கலந்து கொள்ளுகிறுர்கள். திருச்சி தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதமும் கழகத்தாரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு 11-ம 12-ந் தேதி நிகழ்ச்சிகளில் கலந்து சொற்பொழிவாற்றுகிறுர். 13-ந் தேதி [illegible] தாயகம் திரும்பிவிடுவார் என்று தெரிகிறது.


வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானுல் உடனே

"ஹெர்பிஞேல்"

உபயோகியுங்கள்.

இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சர்யமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பிஞேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப் போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டைப் போல் இங்கும் நாட்டிய விழா நடக்க வேண்டும்

## இலங்கை கலைக் கழகம் ஏற்பாடு செய்யுமா?

## திருமதி திலகவதி கனகசபை அளித்த நடன விருந்து

கடந்த சனிக்கிழமை திருமதி திலகவதி கனகசபையும் அவரது 16 மாணவிகளும் அளித்த நாட்டிய விருந்தை அனுபவிக்க லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்துக்கு சென்றோம். வெளிப்புற வாசலில் காலடி வைத்ததும் தோரணங்களும் குத்துவிளக்குகள் சகிதம் பூரணகும்பமும் வரவேற்றன. 6 அடி அப்பால் சென்றதும் நடராஜரின் தாண்டவத் திருக்கோலம் காட்டும் விக்கிரகம் காணப்பட்டது. பரதநாட்டியக்கலை நிகழ்ச்சி நடத்தும் இடத்தில் இத்தனை பொருத்தமான சூழ்நிலையை சிருஷ்டித்திருக்கிறார்களே என்று மனதார வாழ்த்திக்கொண்டு மண்டபத்துள் பிரவேசித்ததும் முதலில் நடந்த நிகழ்ச்சி முன்னிருந்த மனநிலையை அடியோடுதகர்த்துவிட்டது.

### முதல் நிகழ்ச்சி விந்தையானது

நாம் நிகழ்ச்சியை, அதாவது நாட்டியத்தை அனுபவிக்க வந்தோமா அல்லது பயில வந்தோமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. மண்டபம் நாட்டியப் பள்ளிக்கூடமாகவும் திருமதி திலகதி கனகசபை அங்கு நாட்டிய ஆசிரியையாகவும் மாறிவிட்ட விந்தை நடந்தது. பரதநாட்டியத்தின் உள் அடக்கம்பற்றி ஒலிப்பதிவுக் கருவி ஆங்கிலத்தில் சொல் விளக்கம்தர, திருமதி திலகவதி (அபிநயம், பாவம் மூலம்) மெய்விளக்கம் தந்தார். அந்த விளக்கங்களை அப்போது வந்த வடமொழி சுலோகங்கள் குழப்பியடித்ததை நினைத்தால் கும்பி எரிகிறது. விருந்து சாப்பிடப் போன ஒருவனிடம் பரிமாறப்படும் பட்சணத்தின் தன்மை, அது தயாரிக்கப்

**விமர்சனம்**

பட்ட முறைபற்றியெல்லாம் ஏன் வரிந்துகட்டிக்கொண்டு அளந்துகொட்ட வேண்டும்? அதற்கு இடமும் காலமும் வேறு உண்டல்லவா? நாட்டிய விருந்து சம்பந்தப்பட்ட மட்டிலும் நிலைமை அப்படித்தான்.

### இசைக் குழு இல்லை

நாட்டியம் என்றால் பாட்டு இல்லாமல் அது நிறைவு எய்தாது. பாட்டுக்கு அனுசரணையாகத் தாளம் உட்படப் பக்கவாத்தியங்கள் வேண்டும். நாட்டிய நிகழ்ச்சியை நேரில் கண்டு அனுபவிக்க விரும்புபவர்கள் ஆடுபவரைக் காண்பதோடு திருப்தி அடைய முடியாது. பாடுபவரும் வேண்டும்; இன்னும் பக்கவாத்தியக்காரரும் வேண்டும் மேடையில். இவர்கள் இல்லாமல் ஒலிப் பதிவு கருவியை மட்டும் திரைமறைவில் வைத்துக்கொண்டு கருமத்தை முடித்துவிட்டார் திருமதி திலகவதி கனகசபை.

மேற்படி கலைஞர்களையெல்லாம் வேண்டிய சமயங்களில் தேடிப் பிடித்து கட்டி மேய்ப்பது பெரிய தொல்லை என்று திலகவதி சொல்லலாம். ஆனால் ஒலிப்பதிவுக் கருவியே மிகப் பெரிய கெடுதலை உண்டு பண்ணிவிட்டதை உதாரணத்தோடு கட்டிக்காட்ட வேண்டியது நமது கடமை.


### ஒலிப்பதிவு கருவி செய்த சோதனை

மேடைமீது வந்த பிள்ளை ஒன்று ஆட்டத்துக்கு தயாராகி முதல்படியாக கைகளை இருமருங்கும் நீட்டிக்கொண்டது. நீட்டிய கைகள் நீட்டியபடிதான். ஆயத்த நிலையில் நின்ற பிள்ளை நின்றசிர்தான். நிமிஷங்கள் ஒன்று இரண்டு என்று இப்படியே போய்கொண்டிருந்தன. ஒலிப்பதிவுக் கருவி இசையோ தாளமோ வழங்கவில்லை. எவ்வளவோ நேரம் கழிந்த பின்னர்தான் கருவி தன் வேலையைத் தொடங்கியது. அவ்வளவு நேரமும் பிள்ளைக்கு நரகவேதனை. மண்டபத்துள் குபீர் சிரிப்பொலி! இது அலங்கோலமில்லை?

### ஒத்துழைப்பு இல்லை

இன்னொரு பிள்ளை ஆடும்போது ஆடை நழுவிவிட்டது. நழுவியதை எடுத்து இடுப்பில் செருகிக்கொள்ள பிள்ளை பட்டபாடு போதும் போதுமென்றாகிவிட்டது. ஒலிப்பதிவுக் கருவிக்கு பிள்ளையின் கஷ்டம் தெரிந்தால் தானே! தன்பாட்டுக்கு அது முடுக்கிவிட்டபடியே வேலை செய்ய, பிள்ளை, அவிழ்ந்த ஆடையைச் சரி செய்யாமல் எப்படியோ அவஸ்தைதப் பட்டு ஆடிவிட்டுச்சென்றது. இசைக் கோஷ்டி நேரில் மேடையில் இருந்து இசைப்

(13-ம் பக்கம் பார்க்க)



சிட்டாடல் தயாரிப்பான "விஜயபுரி வீரன்" என்ற படத்தில் காமினி—ஆனந்தன்.

## தொழிற் சங்க இயக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் முதலாளி வர்க்கமும் முனைந்து நின்றன.

### சட்டத்துக்கு எதிராக கிளர்ச்சி

தொழிற் சங்கங்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தும் அத்தகைய சட்டம் உருப்பெறுவதைத் தடுக்க முடியாமல் போயிற்று. இத்துறையில் தொழிற் சங்கங்கள் பெறக்கூடிய வெற்றி, வேலை நிறுத்தத்தை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் தண்டனைக்குரிய குற்றம் என்று விதிப்பதை தொழிற் சங்கச் சட்டத்துடன் புகுத்தாமல் பிறிதொரு சட்டமாக இயற்ற அரசாங்கம் உடன்பட்டது மட்டுமேயாம். அவ்வாறு பிறிதொரு சட்டமாக இயற்றியதனால் நன்மை பயக்கும் தொழிற் சங்கச் சட்டத்தைப் பாதிக்காமல் அக் கிறிமினல் விதித் திருத்த சட்டத்தை (Criminal Law Amendment Act of 1871) ரத்துச் செய்யும்படி தொழிற் சங்கங்கள் கிளர்ச்சி செய்ய சந்தர்ப்பம்கிடைத்தது.

### தொழிலாளருக்கு சட்டம் தந்த அனுபவம்

1871-ல் இயற்றப்பெற்ற கிறிமினல் விதித்திருத்தச் சட்டம் தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தம் என்னும்ஆயுதத்தைப் பிரயோகிக்க முடியாமல் செய்ததென்று மட்டும் தொழிலாளர் உலகம் கணிக்கவில்லை; தம்முடைய சுய மரியாதைக்கே மாசு கற்பித்ததாகவே கருதினர். எனவே இச் சட்டத்தை ரத்துச் செய்விப்பதையே தம்முடைய ஒரே இலக்காகக் கருதி தொழிலாளர் இயக்கங்கள் யாவும் கருமமாற்றின.

இப்புதுச் சட்டத்தின் பிரகாரம் வேலை நிறுத்தம் நேர்ந்த அநேக சந்தர்ப்பங்களில் சக தொழிலாளரை வேலைக்குப் போகாமல் நிற்கவே முற்பட்டோர் மிகவும் கடுந் தண்டனைக்குட்படுத்தப்பட்டனர். 1871-ம் ஆண்டிலேயே தெற்கு உவேல்ஸில் வேலைக்குச் சென்ற ஒருகருங்காலித் தொழிலாளியை நோக்கி "Bah" என்ற ஏளனச் சொல்லை உச்சரித்ததற்காக ஏழு பெண்களுக்கு சிறை வாசம் அளிக்கபபட்டது.

### தேர்தலில் தொழிலாளர் பிரச்னை

இவ்வாறான நிலைமையில் தொழிலாளர் உலகம் இச் சட்டத்தை ரத்துச் செய்விப்பதற்காக அரசியல் அரங்கில் பெரும் கிளர்ச்சியையுண்டாக்கியது. எனினும் அக்காலத்து இடதுசாரிக்கட்சியெனக் குறிப்பிடக்கூடிய "லிபரல்" (Liberal) பிரதமமந்திரியாயிருந்த கிளாட்ஸ்ரோன் (Gladstone) சிறிதும் மனம் கசிந்து கொடாமல் கல்லுப் பிள்ளையார் போல் வீற்றிருந்தார். ஆகவே அடுத்து வந்த தேர்தலில் தொழிற் சங்கங்கள் தமது கோரிக்கையை பகிரங்கமாகப் பிரகடனம் செய்து தேர்தலில் முன் வந்த அபேட்சகரை முற்றுகையிட்டனர்.

### கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி சட்டம் ரத்து

மிகவும் நூதனமாக வலதுசாரிக் கட்சியான "கன்சர்வேட்டிவ்" கட்சியில் பெரும்பான்மை அபேட்சகர்கள் தனிப்பட்ட முறையில் தொழிற் சங்கங்களின் கோரிக்கையை அநுமதிக்கச் சம்மதித்தனர்.(பெரும்பான்மை தொழிலாளர் இச் சமயத்தில் வாக்குரிமையைப் பெற்று விட்டனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.) அத்தேர்தலில் கிளாட்ஸ்ரோனும் அவர் கட்சியும் தோல்வியுற்றன. வெற்றி பெற்ற கன்சர்வேட்டிவ் கட்சி பொது மக்கள் அபிப்பிராயத்தையும் தொழிலாளரின்பலத்தையும்உணர்ந்து தாராளமனோபான்மையைக் காட்டி 1871-ல் இயற்றப் பெற்ற கிறிமினல் விருத் திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்தது.

### தொழிலாளர் சட்டம் உதயம்

அத்தோடு எஜமான் சேவையாளர் சட்டம் என்ற பழைய சட்டத்தையும் அகற்றி அதற்குப்பதிலாக தொழிலாளர் சட்டம் என்ற புதுமையும் புரட்சியும் தொனிக்கும் தலைப்புடன் மிகவும் முற்போக்கான அம்சங்களைக் கொண்ட சட்டம் ஒன்றையும் நிறைவேற்றி வைத்தது. தொழிற் சங்கங்கள் முதலாளிகளுடன்பேரம் பேசுதலில் வெற்றி பெய்துவதற்கு இன்றியமையாத வேலை நிறுத்தம் என்னும் ஆயுதத்தைப் பிரயோகித்தற்கு அத்தியாவசியமான சக தொழிலாளரை வேலைக்குச் செல்லாது வசிகரித்தல் முதலான நடவடிக்கைகள் சட்டரீதியானவை என்று ஏற்கப்பட்டன.

எனவே 1871-ம் ஆண்டு தொடக்கம் 1876-ம் ஆண்டு வரையில் இயற்றுவிக்கப் பெற்ற பல சட்டங்களும் ஆங்கில நாட்டில் தொழிற் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்குவதற்கு சாதகமான உரிமையோலையாக அமைந்தன என்று கூறலாம்.

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தொண்டர்களின் நீங்காக் கடமையாகும். ஆயினும் தொண்டர்கள் வேண்டும் வரை தமிழன்பர்கள் தம் கருமங்களைத் தமிழில் ஆற்றக் காத்திருக்கக் கூடாது. குறிப்பாக ஒன்று சொல்லுகிறோம்:

### தமிழில் காசோலை ஏடுகள்

காசோலை ஏடுகள் (Cheque Books) இப்பொழுது ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளன. இனிச் சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடுதற்கு வாய்ப்பளிக்கத் தக்கதாகச் சட்டம் ஆக்கப் போகிறார்கள். காசோலை ஏடுகளைப் பயன்படுத்தும் தமிழர்கள் யாவரும் தங்கள் தங்கள் வங்கிகளுக்குத் தமிழ்க் காசோலை ஏடுகள் வேண்டுமென்று உடனே அறிவித்தல் வேண்டும். வங்கிகளுடனும் தமிழிலேயே தொடர்பு வைத்தல் வேண்டும். இதனால், வங்கிகளிலே தமிழ் இடம் பெறவும், தமிழர் உத்தியோகம் பெறவுஞ் செய்யலாம். காப்புறுதிக் கம்பனிகள் (Insurance Companies) போன்ற நிலையங்களுடனும் தமிழிலேயே தொடர்பு கொள்க.

பணி சிறக்க இயக்கமும் பலம் பெற வேண்டும்.

இன்றே தமிழியக்கத் தொண்டராகச் சேர்ந்து கொள்ளுங்கள். தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. எண் 1183, கொழும்பு எனும் முகவரிக்கு தங்கள் முகவரி வயது, தொழில் முதலிய விவரங்களை உடனே எழுதுங்கள்.

சிமிந்தி
UBE (ஜப்பான்)
டயமண்ட் ”
சங்கர் (இந்தியா)

இரும்பு சாமான்கள்

GI கூரைத் தகடுகள்
எல்லா அளவுகளிலும்
முள் கம்பி
M. S. ரவுண்ட்ஸ்
கம்பி ஆணிகள்
GI குளாய்கள்

தேயிலைப் பெட்டிகள்
பீச், பேர்ச், மோமி, ஜிந்தோட்டை
ரகங்கள் கிடைக்கும்.

ஜபர்ஜி பிரதர்ஸ்,
நிர். 161, குமார வீதி, புறக்கோட்டை;
148, ஆமர் வீதி, கொழும்பு
போன்: 78501 அல்லது 3857.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பதாளுல் இந்த இக்கட்டுகள் ஏற்படுமா?

### ஜிப்ஸி நடனம்

இன்னும் ஜிப்ஸி நடனம் நடந்தபோதும் இசைக் கலைஞர்கள் நேரில் பங்கு கொள்வதில் உள்ள சிறப்பும் அவர்கள் இல்லாமல் ஒலிப்பதிவுக் கருவி கொண்டு சமாளிப்பதில் உள்ள 'சப்' என்ற தன்மையும் தெளிவாகின. ஜிப்ஸி நடனத்தின் போது கலைஞர் ஒருவர் மேடையில் பல தப்லாக்களை வைத்து வாசித்தார். வாசிப்பு கொட்டி முழக்கியதாகவே இருந்த போதிலும் நிகழ்ச்சிக்கு அது வாளிப்பும் உயிரும் கொடுத்த உண்மையை உணர முடிந்தது.

### வைஜயந்தி என்ன செய்தார்?

நாட்டிய நிகழ்ச்சிக்கு உயிரும் பொலிவும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே தலைசிறந்த நாட்டியக் கலைஞர்கள் கூட ஒலிப்பதிவு வசதிகள் தாராளமாக இருந்தும், இசைக் கலைஞர் குழுவை எப்பொழுதும் அமர்த்திக் கொள்ளுகிறார்கள் சமீபத்தில் லண்டன், பாரிஸ், மாஸ்கோ முதலிய நாடுகளுக்கு சென்று ஆடிப் புகழ்க் கொடி நாட்டிய வைஜயந்திமாலாவே அங்கெல்லாம் இசைக் கலைஞர் கோஷ்டி ஒன்றைத் தம்முடன் கொண்டு சென்ருர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நீர் வர்ணனை

இனி நாட்டியங்களை எடுத்துக் கொண்டால் ஜிப்ஸி நடனத்தைப் போலவே குஜாரத்தி நடனங்களும் குறத்திகும்மியும் ரஞ்சகமாக இருந்தன. சமுத்திர வர்ணனை (நீர் நடனம்) பிரமாதம் என்று சொல்லலாம். காட்சி அமைப்பின் சிறப்பால் இந்த நடனம் உயர்வடைந்தது. பொதுவாக ஆடை அணிகளும் மேலே சொன்ன நடனங்கள் அத்தனைக்கும் சோபை அளித்தன.

### திலகவதியின் நாட்டியத் திறன்

திருமதி திலகவதியின் நாட்டியத் திறமையைச் சந்தேகிப்பதற்கில்லை. ஆட்டத்தில், அபிநயத்தில், பாவத்தில், முத்திரை பொறிப்பதில் எல்லாம் அவர் சிறந்து விளங்கவே செய்கிருர். ஆயினும் செய்திகள், விளம்பரங்கள் மூலம் அறிமுகமாகிய 'நாட்டிய திலகம்' திலகவதியை நம்மால் மேடையில் காணமுடியவில்லை. அன்று தான் அப்படியோ, அல்லது செய்திகள் 'விளம்பரங்களில் தான் கோளாரோ? புரியவில்லை நமக்கு.

ஆடற் கலை பெரியஇடத்து சமாச்சாரமாக இருக்கும் வரைக்கும் வெறும் விளம்பரம்தான் அதை வாழ வைக்கும். ஆயினும் வாழ்வு போலி வாழ்வாகத்தான் இருக்கும். உண்மையான வாழ்வு பெற வேண்டுமானுல் அது சாதாரண மக்களிடத்தும் செறிய வேண்டும். பூஞ்செடி வீட்டுக்குள் சட்டியிலும் வைத்து வளர்க்கப் படுகிறது. வெளியில் தரையிலும் வைத்து வளர்க்கப் படுகிறது. இரண்டுக்கும் வித்தியாசம் உண்டல்லவா! சட்டியிலிருந்து விடுபட்டுத் தரைக்கு வர வேண்டும் ஆடற் கலை.

எது எப்படி இருந்தபோதிலும் ஆடற் கலைக்கு இப்போது இலங்கையில் நல்ல காலம் பிறந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. பலரும் அதில் பிரியம் காட்டுகிருர்கள். கொழும்பைப் பொறுத்தவரையில் திருமதி நீலா சத்தியலிங்கம், திருமதி ரஞ்சனு தங்கராஜா, திருமதி திலகவதி கனகசபை ஆகியமூவரும் தத்தமது பாடசாலை மாணவிகளுடன் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்திக் காண்பித்திருக்கிருர்கள். சமீபத்தில் குமாரி திருக்குமாரசாமியும் கொழும்பில் ஆடினுர்.

### நான்கு அம்சங்கள்

நீலாவின் நடனத்து கம்பீர்யமும் (Dignity), ரஞ்சனுவின் நடனத்து கலை அழகும் (Grace), திலகவதியின் நடனத்து லளிதமும் லாகவமும் (Suppleness), குமாரி திருக்குமாரசாமியின் நடனத்துக் கவர்ச்சியும் (Charm) கண்டவர்கள் மறக்கமுடியாதவை. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பார்த்து ரஸித்த இந்த நான்கு அம்சங்களையும் ஒரே சமயத்தில் கண்டு களிக்க வைக்க முடியுமானுல் அது பெரிய கலைத் தொண்டு ஆகும். ஆடற் கலைக்கு ஆக்கம் அளித்தது போலவும் ஆகும்.

நேரடியாகச் சொல்வதானுல், தற் போதைக்கு இத்தனை கலைஞர்களையும் கொண்டு நாட்டிய விழா ஒன்று வைக்க வேண்டும். விழா ஒரு வாரகாலம் நீடிக்கலாம். இதற்கு ஸீஸன் டிக்கட்டுகளை விற்கலாம். ஒவ்வொரு நாளும் கலைஞர்கள் தனித்தோ, கூட்டாகவோ அல்லது மாணவிகளுடனே பங்கு பற்ற வேண்டும். இதனுல் கலைக்கு ஆக்கம் தேட முடியும். அத்தோடு, இப்போது ஆளுக்காள் வக்கரித்துக் கொண்டு மூலைக்கு மூலை இருக்கும் கலைஞர்களுக்கிடையே ஒற்றுமையையும் பரஸ்பரம் ஒத்துழைப்பையும் நல்லெண்ணப் போட்டிகளையும் (Healthy Competitions) ஏற்படுத்தலாம்.

### கலைக் கழகம் ஏற்பாடு செய்யுமா?

இந்தப் பணியை இலங்கை கலைக் கழகம் முயன்ருல் எளிதில் செய்து முடிக்கலாம். தமிழ் நாட்டில் இசை, நாட்டிய, நாடக விழாக்கள் 'ஸீஸன்' வாரியாக பெரும்பாலும் டிசம்பர் மாதத்தில் நடப்பது போல இங்கும் ஏற்பாடு செய்யக்கூடிய வசதிகளோடு இருக்கும் இலங்கை கலைக் கழகத்துக்கு இந்த ஆலோசனையைச் சமர்ப்பிக்கிருேம். கலை வளர்க்கும் நோக்கம் கொண்ட கழகம் நம் ஆலோசனையைத் தட்டிக் கழிக்க மாட்டாது என்பது எமது நம்பிக்கை. —கே. கே. ஆர்.

## தமிழ் தமிழாக...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் மறைமலையடிகள் ஆவர். எனினும் அன்று செவிமடுத்தோர் சிலர். ஆனுல் இன்றே தமிழ் நாடு அன்னுரின் முன் கூட்டி உணர்ந்த நுண்ணறிவையும் ஆற்றலையும் தமிழ் மீது அவருக்கு இருந்த அழியா ஆர்வத்தையும் எண்ணி யெண்ணி வியப்புறுகின்றது. 1938-ல் இந்தியை வலிந்து புகுத்திய அதே இராஜாஜியே 1958-ல் அதாவது சரியாக இருபது ஆண்டுகள் கழித்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை மும்முரமாக நடாத்தலானுர். அரசியலில் சாணக்கியர் எனப் பெயர் பெற்ற இராஜாஜி அன்று உணராத உண்மையை மொழியியலில் ஈடுபட்ட மறைமலையடிகள் உணர்ந்தார் எனின் அவரின் துண்மாண்நுழைபுலத்தை எவ்விதம் எடுத்துரைப்பது! எவ்விதம் ஏற்றிப் போற்றுவது!

### கைம்மாறு

"நன்றி மறப்பது நன்றல்ல" என்பது வான் மறை தந்த வள்ளுவன் கூற்று. அந்த வள்ளுவரின் வழி நின்று மறை மலையின் மாண்பினை வழுத்தி அன்னுர் தொடங்கிவைத்த தொண்டை நிறைவேற்றுவதே யாம் அவர்கட்கு செய்யும் கைம்மாறு ஆகும். தமிழ் இனம் செய்யுமா, அல்லது "மறைமலையடிகள் வளர்த்தது தமிழ்தானு?" என்று கேலி செய்யும் கும்பலைத் தாங்கி மகிழுமா?

---

## வடக்கு கிழக்கு....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு வன்னியசிங்கம்: இல்லை. உங்கள் அதிகாரச் சட்டத்தில் தமிழ்மொழி பிரதேச வாரியாகச் சில அலுவல்களுக்கு அனுமதிக்கப்படும் எனக் கூறியுள்ளீர்கள். இப்பொழுது சமஷ்டி முறையெனச் சிலேடையாகப் பேசித் தப்பிக்கொள்ள முடியாது. தமிழ் மொழி அதிகாரச் சட்டம் திருப்தியளிக்கக் கூடியதாயிருந்தபோதிலும் அச்சட்டம் ஒருதலைப்பட்சமாக, நாமெல்லாரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, நிறைவேற்றப் பட்டது.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: நீங்கள் ஆன்மா வடிவில் (உள்ளத்தால்) இங்கு (பாராளுமன்றத்தில்) பிரசன்னமாயிருந்தீர்கள்.

திரு வன்னியசிங்கம்: கிடையாது. அதுசம்பந்தமாக நீங்கள் இப்போது 'பல்டி' அடித்துவிட முடியாது.

(தொடரும்)


4-வது மகத்தான வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி)
வின்ஸர் (யாழ்ப்பாணம்) றீகல் (யாழ்ப்பாணம்)
ஆகிய தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது!


சிவாஜி கணேசன் - பத்மினி
ஜெமினி கணேசன் - ராகினி
நடிக்கும்

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

(முழு நீள டெக்னிக் கலர் படம்)

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
18-ம் தேதி வெள்ளி முதல்
பண்டரிபாய்-பாலாஜி
நடிக்கும்
மனைவியே மனிதனின் மாணிக்கம்





3-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஜோதி (திருகோணமலை)
ஆகிய தியேட்டர்களில் கடைசி சில தினங்கள் மட்டும்
மனோஹர்-ராஜசுலோசனு-ராஜேந்திரன்-ராஜம்
நடிக்கும்

**புதுமைப் பெண்**

சென்ட்ரல் (பருத்தித்துறை) யில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
கட்டபொம்மன் தூக்கு மேடையில்!
சிறையிலிருந்து தப்பியோடிய ஊமைத்துரை மருது பாண்டிய சகோதரர்களிடம்!
வெள்ளையருக்கும் மருது பாண்டியருக்கும் போர்
எங்கே?

**சிவகெங்கைச் சீமை**

இப்பொழுது யாழ்ப்பாணம்
ராணி தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரோ?

?

..........................

கவிஞர்கள் காணும் காட்சிகள் கவிதையாக ஊற்றெடுக்கிறது. கவிஞர்கள் காணுங் காட்சிக்கும் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளுண்டு. கவிஞன் கண்ட பொருட்களுடன் கற்பனையென்னும் மெருகையிட்டுக் கவின் பெறச் செய்வதுடன், ஒரே நேரத்திற் பல காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிருன்.

மலரை மங்கைக்கும், மதியை அவள் வதனத்துக்கும் கெண்டையைக் கண்களுக்கும், காந்தளைக் கைகளுக்கும் இப்படி ஒவ்வொரு அவையவங்களுக்கும் ஒவ்வொரு உவமானத்தை அளித்து மகிழ்வது கவிஞனது கற்பனைத் திறன். இதோ! ஒரு கவிஞன் மலருக்கும் மங்கைக்குமுள்ள தொடர்பைத்தருகிருர்.

ஒரு எழில் மங்கை பூம் பொய்கைக்குச் சென்றுமலர் பறித்தாள். மங்கையின் அழகிய தெளிவான மதிமுகம் வண்ணத் தாமரை போன்று மலர்ந்திருந்தது. மதுவுண்ண வளைந்து கொண்டிருந்தது ஒரு கரு வண்டு. அது அவள் வதனத்தை மலர் என்று கருதி அவள் காந்தள் கையிலே இருந்து விட்டது. சில நிமிடங்களில் அவளது மலர்கரம் வியர்த்துவிட வண்டு பறந்தோடிவிட்டது.

அதே கவிஞன் காணும் அடுத்த காட்சியும் எம்மை அவன் பார்க்க வருகிறது. குளிர்ச்சி பொருந்திய வண்டாமரைக் குளத்திலே தண்ணீர் மொள்ளச் சென்ருள் ஒரு மங்கை. தண்ணீரை இரு கரங்களாலும் அள்ளி முகத்துக் கெதிரே பருகக் கொண்டு சென்ருள். அடுத்தகணம்! கெண்டை கெண்டை!! எனக் கூவிக் கொண்டு கரையைநோக்கியோடினுள். கெண்டையைக் காணவில்லை. நின்று தயங்கினுள் அவள் கண்களே அவளை ஏமாற்றி விட்டது. இதோ! கவிஞன் கவிதைகள்:

"மங்கை ஒருத்தி மலர்
கொய்வாள் வான் முகத்தைப்
பங்கய மென் றெண்ணிப்படி
வண்டைச்-செங்கையாற்
காத்தாளக் கைம் மலரைக்
காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்ருன்
வேந்து.
தண்டுலாவிய தாமரைப்
பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு
கேந்தினுள்
கெண்டை கெண்டை
யெனக் கரையேறினுள்
கெண்டை காண் கிலாள்
நின்று தயங்கினுள்."

—ம. சபாரத்தினம்.

சித்தாண்டி.




# மக்கள் கவி பாரதி

—மு. கனகராஜா—

தொன்மைச் சிறப்பு வாய்ந்த நாடுகளிலே மிகத் தொல் பெருமை பெற்ற எம் தாய்த் தமிழ் நாடு ஈடிணையற்று விளங்கிய பல கவிஞர்களைப் பெற்றிருந்தது. அவர்களில் ஒருவரே இன்று தமிழ் இளைஞர்களும், அறிஞர்களும், கவிகளும் பிறரும் 'அமரகவி', 'வரகவி', 'மக்கள் கவி', 'தேசிய கவி' என்று போற்றும் திரு சுப்பிரமணியப் பாரதியார்.

அறிவுகெட்டு, அடிமையாக, அகந்தைகொண்ட அந்நியரின் ஆதிக்கத்திலே அன்று அகதிகளைப் போவிருந்த தமிழகத்திலே 1882ம் வருடம் மார்கழி மாதம் 11ம் நாள் சின்னச்சாமி ஐயர், லட்சுமி அம்மாள் தம்பதிகளுக்குப் பிறந்தார்.

தந்தை பள்ளிக்கு அனுப்பினுர். ஆனுல் பள்ளி வாழ்க்கையும், புத்தகப் படிப்பும் எட்டிக்காயாக இருந்த அவருக்கு, ஏரி, கடல், குளம், சோலைகள் என்பனபோன்ற இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்கள் தேனென இனித்தன. அவ்வித சூழ்நிலையிலிருக்க விரும்பிய அவர் புதுமையான எண்ணங்களை எண்ணினுர். அடிமை வாழ்வை அழிக்கத் துடித்தார். 'தமிழ்க் கவி' இயற்ற ஆவல்கொண்டார். ஆதலால் அன்றுமுதல் தன் தந்தையின் அரவணைப்பிலே தமிழ் இலக்கியங்களைப் படிக்கலானுர்.

பாரதியார் உயர்ந்த, சிறந்த எண்ணங்களை எண்ணினுர். அதன் காரணமாகவே இன்று அவரது திருப்பெயர் நம் அகத்திலே அழியாது அமைந்துவிட்டது. நாமும் உயர்ந்த எண்ணங்களையே எண்ண வேண்டும்.

"ஆக்கம் அதர்வினுய்ச்
செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை"

என்று திருக்குறள் கூறுகின்றது. அவ்விதமேதான் பாரதியாரும் பாடுபட்டு தமது பதினெருவது வயதில் தாம் எண்ணியதன் பயனை அடைந்தார். ஆம்! பதினெருவது வயதிற்குள்ளேயே புறநானூற்றைப் புரட்டி, சிலப்பதிகாரத்தைச் சிந்தித்து, அகநானூற்றை அறிந்து, கலிங்கத்துப் பரணியைக் கற்று, மணிமேகலையை மனதிலிருத்தி, திருக்குறளைக் குடித்து கனக் கற்ற நாவலர்களும், பாவலர்களும் வீற்றிருந்த மன்றத்தில் தனது கவிதைகளைப் பாடி 'பாரதி' என்னும் பட்டத்தைப் பெற்ருர்.

பாரதியார் பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றினுர். அப்போது சோர்ந்து கிடந்த தமிழர்களுக்கு புத்துயிர் ஊட்டக்கூடியதான கவிதைகளை பிரசுரித்தார். அறிவுரை கூறுவாரற்றுக் கிடந்த ஆயிரமாயிரம் உள்ளங்கள் பாரதியாரது பாடல்களையும், கவிதைகளையும், சுதந்திர கர்ஜனைகளையும் ஆவலுடன் எதிர்பார்த்துப் படித்தன.

அந்நியரின் ஆட்சிக்குள்ளிருந்த அன்று 'வரகவி'யின் ஒவ்வொரு பாடல்களும், கதைகளும், கட்டுரைகளும் விடுதலைப் போராட்டத்தைப்பற்றியும், அடிமை வாழ்வைப்பற்றியுமே பறைசாற்றின எனவே ஆங்கிலேயன் என்ற பாம்பாட்டியின் மகுடியிலே மயங்கிக்கிடந்த தமிழினம் என்ற பாம்பு சீறத் தொடங்கியது. ஆம் தமிழினம் விடுதலைவேட்கை கொண்டுவிட்டது.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித்திருப்போரை
நிந்தனை செய்வோம்..."
"நாமிருக்கும் நாடு நமது
என்பதறிந்தோம்-இது
நமக்கே உரிமையாம்
என்பதறிந்தோம்-இந்தப்
பூமியில் எவர்க்கும் அடிமை
செய்யோம்-பரி
பூரணனுக் கேயடிமை செய்து
வாழ்வோம்"
"உச்சிமீது வானிடிந்து
விழுகின்றபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

இவ்விதமாக உணர்ச்சியூட்டி, நரம்புகளைப் புடைத்தெழச் செய்கின்ற பாடல்களைப் பார்த்த பின்னும்—படித்த பின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை. ஆமாம்! வீர இளந் தமிழ்ச் சிங்கங்கள் வீணே படுத்துக் கிடக்குமா? வீறுகொண்டெழுந்தன. சுதந்திரம்! சுதந்திரம்!! சுதந்திரம்!!! என முழங்கின.

(முடிவு அடுத்த வாரம்)

# யான் கண்ட வள்ளுவர்

ஓர் நாள் யான் தமிழகத்தின் தந்தையான வள்ளுவரைச் சந்தித்தேன். "முதலிலேயே பெரியதோர் புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டானே? இனிமேல் வருவதெல்லாம் அண்டப் புளுகாய்த்தானிருக்குமோ?" என நீங்கள் எண்ணுமாப் போல் தோற்றுகின்றது எனக்கு. அன்பர்களே! அப்படியான பொய்யுமல்ல, புளுகுமல்ல இது. உண்மையிலேயே யான் வள்ளுவரைக் கண்டேன். கொஞ்சநேரம் அவருடன் அளவளாவினேன். அவ்வளவுதானே, என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டார் அவர். அன்றிருந்து—அதாவது வள்ளுவரை யான் கண்ட தினத்திலிருந்து இன்றுவரை ஒரு விநாடி வேளை கூட அவரை மறந்தறியேன். எந்த நேரமும் வள்ளுவரையே எண்ணிக்கொண்டிருப்பேன் இதுவரை வேறு பலரும் எம் வள்ளுவரைக் கண்டிருப்பார்கள். அவர்கள் எந்த எந்தத் தோற்றத்தில் வள்ளுவரைக் கண்டார்களோ? தெரியாது "அப்போ நீ கண்ட வள்ளுவரைப் பற்றிச் சொல்லு பார்ப்போம்" என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள்:

யான் கண்ட வள்ளுவர் எப்படி இருந்தார் தெரியுமா? அகன்ற நெற்றியும், அழகான வெண் முடியும், உயர்ந்த புருவமும், ஒளி வீசும் கண்களும், அன்பொழுகும் நன்னெஞ்சமும், அதை விளக்கும் புன் சிரிப்பும், எளிதான வெண்ணுடையும், எழுத்தாணியும், போதுமென்ற ஞானமும் கொண்டவராய் இருந்தார். பல பல தோற்றங்களில் தோன்றிப் பல பல விடயங்களைப் பற்றியும் என்னுடன் பேசினுர். இப்படியானதோர் அற்புத மனிதரை யான் வேறு எங்குமே இதுவரை கண்டதில்லை.

முதலில் ஓர் ஆசிரியனுய்த் தோன்றிக் கல்வியை யிட்டுப் பேசினுர். பின்பு ஓர் நண்பனுய்த் தோன்றி நட்பையிட்டு நவின்ருர். பின்பு ஓர் அரசனுய்த் தோன்றி ஆட்சியைப் பற்றி அறைந்தார். பின்பு ஓர் வீரனுய்த் தோன்றிப் போரைப் பற்றிப் புகன்ருர். பின்பு ஓர் உண்மைத் துறவியாய்த் தோன்றித் துறவறத்தையிட்டுச் சொன்னுர். பின்பு ஓர் ... போல்—தந்தையைப் போல் தோன்றி மக்களைப் பற்றி—இல்வாழ்க்கையைப் பற்றி இயம்பினுர். பின்பு ஓர் வைத்தியனுய்த் தோன்றி மருந்தைப் பற்றி முழக்கினுர். பின்பு ஓர் உழவனுய்த் தோன்றி உழு தொழிலையிட்டு உரைத்தார். இன்னும் பல பல வடிவங்களில் தோன்றிப் பல பல செய்திகளைப் பற்றியும்செப்பிமுடித்தார். அவர் சொல்லாதது எதுவுமில்லை. அவர் சொல்லியதில் எவருக்கும் பொருந்தாதவையுமில்லை. அவர் உரைத்தவை என்றுமே அழியப்போவதுமில்லை. "அவ் வள்ளுவரையாங்களும் பார்க்க முடியுமா?" என்று கேட்கிறீர்களா? தாராளமாய்ப் பார்க்கலாம். இன்றே ஒரு திருக்குறள் வாங்குங்கள். "குறளே வள்ளுவர்—வள்ளுவரே குறள்" படித்துப் பாருங்கள் வள்ளுவர் உங்கள் மனக் கண்ணில் தென்படுவார். அவர் யான் கண்ட வள்ளுவர் போல் தானு? என்று பிறகு சொல்லுங்கள் பார்க்கலாம்? வாழ்க வள்ளுவர்!

"தாமரைத் தீவான்"

மலைவீடு

# எங்கே இருக்கிறது?

இருதயத்துக்குள் இருக்கிறது சார் உயிர்என்ருன் கோபால். இல்லை சார் அது மூளைக்குள்ளே தான் இருக்கிறது என்ருன் வேணு.

உயிர் எங்கே இருக்கிறது என்று ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு எழுந்த பதில்கள் தான் இவை.

சிரித்துக்கொண்டே ஆசிரியர் என்னை நோக்கினுர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கோபாலனின் விடை தான் ஓரளவு சரி என்று எனக்குப்பட்டது. என் பதிலுக்குக் காத்திராமலே,

எல்லோரும் இப்படித் தான் தவருக நினைக்கிருர்கள். கடவுள் எங்கும் வியாபித்திருக்கும் போதும் அவர் ஆகாயத்தில் வெகு உயரத்தில் இருக்கிருர் என்று பலர் எண்ணுவது போல் தான் இதுவும். உயிர் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறது, என்ருர் ஆசிரியர்.

—எ. ஜீ. ஆனந்தம்

# நித்திய செல்வம்

(சோமலிங்கம்)

பரிவு காட்டி எனை வளர்த்துப்
பாலும் சோறும் தான் ஊட்டி
எரியும் எனது வயிற்றினிலே
என்றும் அமுத நிறைவூட்டி
பிரிய மனமே இல்லாது
பெரிதும் என்னைப் பேணியதாய்
பெரிது என்றேன் அதை விடத்தான்
பெரிது என்ருள் தமிழ் அன்னை.

வாழ்வு முழுதும் என் கல்வி
வளர வேண்டும் எனத் துடித்து
வாழ்வு அளித்த என் தந்தை
வையம் தன்னில் பெரிதென்று
ஆய்வு செய்து நான் சொல்ல
அப்பா பெரிது ஆனுலும்
தூய தமிழே பெரிதென்று
சொல்லி நின்ருள் தமிழ் அன்னை.

அப்பா என்று எனை அணைய
அடியே வைக்கத் தெரியாது
தத்தி வருகும் சிறு மதலை
தரணி தன்னில் அழியாத
நித்திய செல்வம் என எண்ணி
நின்று நானும் மகிழ்கையிலே
நித்திய செல்வம் தான் என்று
நின்ருள் எந்தன் தமிழ் அன்னை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்..........................................

பாடசாலை..........................................

விலாசம்..........................................

..........................................

.......................... ..........................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### வடலூர் மாணவர் சுற்றுப் பிரயாணம்

வடலூர் வித்தியாலய ஆசிரியர் மாணவரைக் கொண்ட சுற்றுப் பிரயாணக் கோஷ்டி ஒன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கடற்படை அதிகாரியால் அனுப்பி வைக்கப்பட்ட எந்திரவள்ளத்தில் அனலை தீவுத் துறைமுகத்திலிருந்து ஏற்றிச் செல்லப்பட்டு, காரை நகர்க் கடற்படைமுகாமிலிறங்கி அதைச் சுற்றிப்பார்த்துவிட்டு, அங்கு காத்து நின்ற பஸ்ஸில் பிரயாணமாகி; திருவடிநிலை, கீரிமலை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சிமெந்து தொழிற்சாலை, ஆகாய விமானத்தளம், திருநெல்வேலிக் கமத் தொழிற் பாடசாலை, யாழ்ப்பாணம் நூதனசாலை ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

யோகர் சுவாமியின் ஆச்சிரமம் சென்று சுவாமிகளின் திருவடியில் வீழ்ந்து நமஸ்கரித்து, பஜனை பண்ணி அவர்களின் ஆசீர்வாதமும், நல்லுபதேசமும், பிரசாதமும் ஏற்று, விடைபெற்றுத் திரும்புகையில் சுவாமிகளே எழுந்து சென்று வழியனுப்பியும் வைத்தார்கள். திரும்பி வரும் வழியில் காரை நகர்ப் புதிய தெருவில் வசிக்கும் வித்தியாதரிசி திரு. ச. சபாபதியும் அவரது குடும்பத்தினரும் தமதில்லத்தில் வரவேற்று பசரித்து விருந்தளித்து வழியனுப்பி வைத்தனர்.

---

### பாடசாலை அதிபருக்கு பிரிவுபசாரம்

பெரிய கல்லாறு சிரேஷ்ட பாடசாலை முன்னைநாள் அதிபர் திரு. ஓ. என். கிருஷ்ணபிள்ளைக்கு 30-8-59 ல் பாடசாலை அதிபர் திரு எஸ். அரியரெத்தினம் தலைமையில் அப் பாடசாலைப்பழைய மாணவர்களால் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. செல்வி இ. நல்லம்மாவால் பிரிவு உபசாரப் பத்திரமும் செல்வன் மூ. பொன்னையாவால் பண முடிப்பும் வழங்கப்பட்டன. மா. மயில்வாகனம், து. பூமணி, இ. நல்லம்மா, ஞா. பத்மாவதி எ. டி. புவனசிங்கம், தியாகராசா ஆசிரியர், முத்துக்குமார், ஆகியோர் அதிபர் கிருஷ்ணபிள்ளை இப்பாடசாலைக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைகளையிட்டுப் பேசினர்கள்.

திரு. கிருஷ்ணபிள்ளை தமக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இவைகளைக் கடைப்பிடித்து' நடப்பதுடன் எல்லா மாணவர்களும் இப் பாடசாலையைக் கண்ணிலும் மேலாக மதிப்பதுடன் எதிர் காலத்தில் இப்பாடசாலையை மாபெரும் ஆய் கூடமாக விளங்கவைக்க வேண்டுமென்றும் கூறினர்.

---

### எழுத்தறிவித்தல் விழா

"குழந்தை வளர்ப்பில்—அதன் தொடக்க கல்வியில் போதிய மறுமலர்ச்சி ஏற்படாத வரை ஒரு நாட்டில் முன்னேற்றத்தை காண்பது முயற்கொம்பே! நமது நாட்டின் குழந்தைக் கல்வியை மேலை நாட்டுடன் ஒப்பு நோக்கின் பெரிய ஏமாற்றத்தையே தருகிறது. இதனைகளையவேண்டுமானல் குடும்பத்தை பேணி குழந்தையை வளர்ப்பதற்கும்—கல்வியைப் பேணி உலகத்தை காப்பதற்கும் பெண் கல்வி இன்றியமையாததாகும்."

இவ்வாறு கடந்த 9-8-59 ஞாயிறு மாலை செம்பட்டா வீதி 344-ம் இல: வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற திரு. வி. க. நினைவுப் பள்ளி அதிபர் திரு. மா. சே. அருளின் பெண்மகவு பவளமலரின் எழுத்தறிவித்தல் விழாவில் சிறப்புரை நிகழ்த்திய திரு. சு. கா. சுந்தரராசன் குறிப்பிட்டார்.

மா. சே. அருள் தம்பதிகள் பண்டிதர்கா.பொ. இரத்தினமவர்களைக் கொண்டு எழுத்தறிவித்தல் விழா கொண்டாடினர்கள்.

நண்பர் சுற்றம் சூழ்ந்திருந்த இந்த விழாவுக்கு பண்டிதர் இரத்தினம் தலைமை வகித்துப் பேசுகையில்:

'குறள் கூறும் நல்லறத்தை இல்லறத்தோர் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திரு. இரத்தினவேலும் மற்றும் பலரும் குழந்தைக்கு பரிசு வழங்கி வாழ்த்தி பேசினர்.

திரு. மா. சே. அருள்நன்றி நவில விழாஇனிது முடிவெய்தியது.

---

### மாணவர் கலை மன்றம்

ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப் பாடசாலை மாணவர் கலை மன்றத்தை கடந்த 29-8-59-ல் திரு. பி. எஸ். கிருஷ்ணகுமாரால் திறந்து வைக்கப்பட்டது. அது சமயம் திரு. அ. ஆ. சுமனதாஸ தலைவராகவும் திரு. ஜே. அகுஸ்தீன் பர்னைந்து கௌரவ காரியதரிசியாகவும் திரு.எஸ். தியாகராஜா பொக்கிஷதாராகவும் செல்வன் சு. வடுகநாதன், செல்வி ச. தாகேஸ்வரி ஆகியோர் உபகாரியதரிசிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பதினன்கு மாணவ, மாணவிகள் காரியக் கமிட்டி அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

---

### இஸ்லாமிய வாலிபர் சங்கம்

"பதவி மோகத்தையே குறிக்கோலாகக் கொண்டு பொதுப் பணி செய்ய புறப்படுவோர், அகத்திலொன்று வைத்து புறத்திலொன்று கூறி சமூகத்தினரை ஆட்டு மந்தைகளாக்கும் ஆஷாடபூதிகள், உலகத்தில் எப்பொழுதும் உயர்வடைவதில்லை. உண்மையான பொதுப்பணியை கருத்தில் வைத்து பாடுபடுபவர்கள்தான் உலக மேதைகளாகக் கருதப் படுகிறார்கள்" இவ்வாறு சிலாபம் நகரசபைக் கட்டிடத்தில், ஜனப் எஸ். எல் எம். சமீன் தலைமையில் நடைபெற்ற "சிலாபம் இஸ்லாமிய வாலிபர் சங்க"த்தின் அங்குரார்ப்பண கூட்டத்தில் பேசிய ஜனப் எம். ஏ. எஸ். யாசின் கூறினர்

அவர் தனது பேச்சில் மேலும் கூறியதாவது:- மனித பருவங்களில் வாலிபம் சந்தனக் காட்டைக் கடந்து வரும் தென்றல் போன்றது. வரலாறுகள் புகழும் உலக மேதைகளெல்லாம் இப் புனித பருவத்தையே பயன் படுத்திக் கொண்டனர். இன்றைய இஸ்லாமிய சமுதாயம் முன்னேற வேண்டுமானல் திருக்குர் ஆனைக் கருவூலமாகக் கொண்டு கட்சி பாகுபாடுகள்-சாதி வித்தியாசங்கள்-முதலியவற்றை விடுத்து, தம்மை சமூகப் பணிக்கு மதச் சேவைக்கு வாலிபர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். ஆழக் கடலிலே ஆடித் திங்களிலே மாலுமி இல்லாது விடப்பட்ட மரக்கலம் போல [illegible] உணர்ச்சி அலைந்து [illegible] படக் கூடாது. கடமையுணர்ச்சியை கருத்தில்வைத்து வாலிபர்கள் நல்ல சமூக சேவைக்கு தம்மை தயார் செய்துக் கொள்ளாதவரை இன்றைய இஸ்லாமிய சமுதாயம் முன்னேற முடியாது எனவே சமுதாயத்தை பிளவுபடுத்தும் சாதி வித்தியாசங்கள்-கட்சி பாகுபாடுகளை தகர்த்து, மதச் சேவைக்கும், மக்கள் பணிக்கும் பாடுபட வேண்டும். அப்பணிக்கு அவர்களை ஆர்வமூட்டி ஆக்க வேலையில் ஊக்க மூட்டுவது பெரியோர்களது தவிர்க்க முடியாத கடமை.

இக் கூட்டத்துக்கு சிலாபம் வாழ் இஸ்லாமிய வாலிபரனைவரும் சமூக மளித்திருந்தனர். இவ் வருட உத்தியோகஸ்தர்களாக கீழ் காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: ஜனப் எஸ். ஏ. பஷீர் மௌலானு, உப தலைவர்கள்:- ஜனப்கள் ஏ. எச். எம். நியால்தீன், எஸ். ஏ. மஜீது, ஏ. வி. எம். அன்வர்தீன், பொதுச் செயலாளர்:- ஜனப். எப். ஏ. எஸ். யாசின், உப காரியதரிசிகள்:- ஜனப்கள் ஏ. முகம்மது, டி. ஜௌஹர், தனதிகாரி:- எஸ். எல். எம். சமீன், கணக்குப் பரிசோதகர்:- ஜனப் எஸ். ஜவாஹிர் மௌலானு. ஜனப் எம். அஸ்வத்கானை தலைவராகக் கொண்ட பிரச்சாரக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இச் சங்கத்துக்கான சட்ட திட்டங்களை கூடிய சீக்கிரம் வகுத்து, அச்சிட்டு விநியோகிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கடைசியில் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

### அருந்ததியர் சங்க பொதுக் குழு தீர்மானம்

"மாந்தரின்ஐம்புலனுக்கும் இன்ப மளிப்பது இசையாகும். இதனுலேயே 'இசைக்கு இழகான் கசைக்கும் இழகான்,' என்ற முது மொழியும் உருவாயிற்று. கல்வி கற்ற இசை மேதைகட்டு பொதுவான அரங்கில் இடமளிகக மறுப்பவர்கள் எழுத்தறியா ஏழைகளான நகர சுத்தித் தொழிலாளர்கட்கு (தமிழர்கட்கு) சாதிய மனப்பான்மையாளர்கள் பொது விடங்களில் முட்டுக் கட்டை போடமாட்டார்களென்பதற்கு என்ன உத்தரவாதம். எனவே, சிறுபான்மைத் தமிழர் மாசபையின் இசை மேதைகள் யாழ் இசை விழாவை பகிஷ்கரித்ததற்கு இச் சங்கம் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறது"

மேற் கண்ட தீர்மானமும், சங்க வளர்ச்சிக்கான முக்கிய வேலைத் திட்டங்களும், அணிமையில் சங்கப் பணி மனையில் அதன் தலைவர். திரு. மூ. வேலாயுதம் தலைமையில் நிகழ்ந்த சங்கப்பொதுக் குழு கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

### பெருங்காடு இளைஞர் மன்றம்

"எதையுந் தாங்கு மிதயம் படைத்தவர்களாக வாலிபர்கள் விளங்கவேண்டும். வெறும் உணர்ச்சியைக் கொண்டு அவர்கள் எதையுஞ் சாதித்துவிட முடியாது. அறிவு, சகிப்புத்தன்மை—அவர்களுக்கு இன்றியமையாதன."

இவ்வாறு 31-8-1959-ல் பெருங்காடு இளைஞர் மன் [illegible] தலைமை தாங்கிய ஆசிரியர் திரு. க. மகாதேவன் தமது தலைமையுரையின் போது குறிப்பிட்டார். கூட்டத்திற்கு ஏராளமானேர் சமுகமளித்திருந்தனர்.

தலைவர் தொடர்ந்து கூறியதாவது: "தேமதுரத் தமிழோசையை மறந்து—நாமமது தமிழரெனக்கொண்டு-இன்று நாம் வாழ்கின்ருேம். வீழ்ச்சியுற்ற நமது சமுதாயத்தின் எழுச்சிக்காக-வாலிபர்கள் வீறுபெற்றெழுதல் வேண்டும்"

திருவ[illegible]ர்கள் கனக-எழிலன், ப[illegible]கோபாலபிள்ளை ஆகியோர் உட்படப் பலர் பேசினர். உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

---

### இஸ்லாமிய இளைஞர் இயக்கம்

போர்வை இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தின் ஆண்டு நிறைவையிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

முதல் பரிசு: செல்வன் எம். எச். எப். நவாஸ், இரண்டாவது பரிசு: செல்வன் எம். எச். எம். நிஸார், மூன்ருவது பரிசு: செல்வன்: ஏ. கே. எம். மஃருன், நாலாவது பரிசு: (நற்சாட்சிப் பத்திரம்) செல்வன்: ஏ. வி. நிளாமுத்தீன்.

பரிசுகளை இயக்கத்தின் நிரந்தரத் தலைவர் ஜனப் ஏ. ஐ. முஹம்மது மஹ்ரூபு வழங்கினர்.

ஆசிரியர்களான ஜனப் எம். வி. எம். ஸாலிஹ் ஜனப் எம். எம். ளரீப் ஜனப் எம். ஐ. எம். எம். ஜெலீது, ஜனப் ஊஸ். ஏ .எம். கௌஸ் முதலியோர் நீதிபதிகளாகக் கடமையாற்றினர்.

---

### இளம் விவசாய கழகம்

மானிப்பாய் கோயிற் பற்று இளம் விவசாய கழகத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த 2-9-59-ல் சீற்றி கட்டிடத்தில் தலைவர் திரு. ஏ. கனகராசாவின் தலைமையில் நடை பெற்றது. இம்மாத இறுதியில் கால் நடை விவசாயப் பொருட் காட்சியொன்றை கழகத்தின் சார்பில் நடாத்துவதென்று அதற்கு ஐந்துபேர் கொண்ட ஒரு உப குழு தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் கழகத்தில் விளையாட்டுப் பகுதியை விரைவில் ஆரம்பித்து வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

---

### பரிபாலனசபை நியமனம்

கிழக்கிலங்கையில்பிரசித்தி வாய்ந்த இந்துக் கோவிலில் ஒன்ருன வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோவில் வீதியில் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் முன்னிலையில் கோவில் பராமரிப்பாளரையும் கோவில் சபையையும் ஏகமனதாய் தெரிவு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு திரு எஸ். எம். ஆறுமுகம் தலைமைவகித்தார்.

பராமரிப்பாளர்:-திரு செ. இராசையா, உதவி பராமரிப்பாளர்:-திரு ப. காளியப்பு, தலைவர்:-திரு நா. நடராசபிள்ளை, தனதிகாரி:-திரு சு. குணநாயகம், (கி. ச. தலைவர் கட்டைப்பறிச்சான்) காரியதரிசி:-திரு க. வெற்றிவேல் (கிராமத் தலைவர் ஈச்சிலம் பத்தை).

மற்றும் கொட்டியாரப் பற்றிலுள்ள சைவ கிராமத் தலைவர்கள், கிராமச் சங்கத் தலைவர்கள் நிர்வாக அங்கத்தவர்களாகக் கொண்ட சபை நியமிக்கப்பட்டது; சென்ற வருடம் வருட உற்சவம் நடைபெருததால் இவ் வருட உச்சவம் 4-9-59-ல் தொடங்கவிருப்பதால் சபையார் உற்சவ ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு மிகவும் சிரத்தை கொண்டுள்ளார்கள் எனத் தெரிகிறது.

---

### இந்து பரிபாலன சங்கம்

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தார்ன், ஸ்ரீ முன்னேச்சுர யாத்திரை அணிமையில் முகத்துவாரம் சர்வசித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு முன்னேச்சுர ஆலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறுக்கொண்டிருக்கும் திருவிழாவில் பங்கு பற்றுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

---

## "உரிமைகள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணமென நாம் அறிகின்ருேம்.

### சொற்கலைப் புலவன் பட்டம்

"அடிகளார் சொல் ஆராய்ச்சித்துறையில் அதிகமாகத் தொண்டு செய்தார். அடிகளார் 70 ற்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருந்தார். 35 மொழிகளோடு தமிழ் மொழியின் பிணைப்பை விளக்கித் தமிழே உலகத்தின் தாய் மொழி என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறினர்; இதனுல் திராவிட மொழி விருத்திச் சங்கம் வேறெவருக்குமே வழங்காத'சொற்கலைப் புலவன்' எனும் சீரிய பட்டத்தை அவருக்கு வழங்குவதாயிற்று" இவவாறு திரு வன்னியசிங்கம் கூறி முடித்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு இறைபுகழ்வாழி தொடர்ந்து பேசுகையில் அடிகளாரது வாழ்க்கை வரலாற்றையும், சமயப் பணியையும், தமிழ்த் தொண்டையும் விரித்துக் கூறினர்.

ஆசிரியர் திரு க.கந்தையா, ஆசிரியர் திரு க. முத்துசாமி ஆகியோரும் விழாவில் பேசினர்கள்.

வண. தனிநாயக அடிகளார், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி முதலானேர் விழாவிற்கு சமுகமளிக்க முடியாது போனமைக்கு வருத்தம் தெரிவித்தும்,விழா வெற்றி பெற வேண்டுமென்று ஆசி கூறியும் தந்திச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

---

## முதலாளி . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டதா? மரியாதையாகப் பேசு. இல்லா விட்டால்......! ஒழுங்காக இந்தச் சம்பளத்துடன் வேலை செய்ய முடியுமானல் வேலை செய். முடியாதென்ருல் போகலாம்" என்ருன் நடராசா.

எமாந்து விட்டேன் என்று எனக்கு உள்ளூரத் தோன்றியது.

"இப்படிப்பட்டவர்களிலும் பார்க்க கம்பனியை மூடிய முதலாளி எவ்வளவு நல்லவர்" என்றது என் மனம்.

"தொழிலாளி முதலாளியானல் இப்படித்தான்......" என்று அறிவுறுத்தியது என் அறிவு.'

நான் எதுவும் பேசாமல் வீடு திரும்பினேன்.

* * *

இப்படி பழைய சம்பவங்களை நினைத்தவன், "இது கடந்த காலம். இனி நிகழ் காலம் எப்படியோ!" என்று அங்கலாய்த்தவாறு தலையில் கைவைத்தான். அப்போது ஒரு பொலீஸ்காரன் அங்கு வந்து அவனை அழைத்தான் விசாரணைக்கு.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# 2-வது வெற்றிகரமான வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

ஆகிய தியேட்டர்களில்

# மனமுள்ள மறு தாரம்





மனைவியை இழந்த ஒருவனின் மனதைக் கவருகிருள் ஒருவள்

இருவரும் காதலர்களாக வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொள்ளுகிருர்கள்

கல்யாணம் முடிந்ததும்

அவனுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்று அறிகிருள்!

அறிந்தும் ஆத்திரப் படுகிருளா? அல்லது கணவனை வெறுக்கிருளா? விடைகாண

## மனமுள்ள மறுதாரம்

படத்தைப் பாருங்கள்.

**பாலாஜி, சரோஜாதேவி, காமினி, தங்கவேலு,**

முத்துலட்சுமி, முத்துக்கிருஷ்ணன், குமுதினி

ஆகியோர் நடித்தது

பின்னணி: ஜிக்கி-சீர்காழி கோவிந்தராஜன்-ஜமுனுராணி-ஏ. எம். ராஜா எஸ். சி. கிருஷ்ணன்-ராஜேஸ்வரி

டைரக்ஷன்: சுப்புராவ்-ராமனுத்

திரைக் கதை வசனம்: முரசொலி மாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 செப்டம்பர் மாதம் 13-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.